Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 04 புதன்கிழமை (17.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 199

தெல்லிப்பளை சம்பியன் 09



முதுமையைத் தடுக்க 11



மலடை நீக்கும் 12



எதிர்ப்போம் 17



பூகம்பத்தை கண்டறியும் 18



# கூட்டமைப்பில் முரண்பாடு உச்சம்

# சுரேஷ் தலைமையில் அவசர கூட்டம்

## தமிழரசுக் கட்சி பகிஷ்கரிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக் கிடையில் உள்ள கருத்து முரண்பாடுகள் உச்சக்கட்டத்தை அடைந் துள்ளது. இதனால் கூட்டமைப்பு உடைந்து பிளவுறும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியிக ளின் தலைவர்கள் இந்த முரண்பாடுகளை அகற்றும் முயற்சியிலும் தீவிரமாக இறங்கியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங கத்துவம் வகிக்கும் கட்சிகளின் உயர்மட்டத் தலைவர்களின் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று யாழில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் வாசஸ்தலத்தில் காலை 11.00 மணியளவில் ஆரம்பமாகிய இந்தக் கூட்டம் மாலை 3.00 மணிவரை நீடித்தது.

வழமைபோல கூட்டமைப்பைப் பதிவுசெய்யும் விவகாரம் அங்கு சூடுகிளப்பியது. அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் சிலர் ஆக்ரோச மாகப் பேசினர். அவர்கள் பொறுமை இழந்தவர்களாகக் காணப்பட் டனர். மாகாண சபைத் தேர்தல் விவகாரம் மற்றும் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க உதவி குறைப்பு பாதிப்பு அதிகம் இல்லை

அமெரிக்காவின் 20 சதவீத நிதி உதவிக் குறைப்பு இலங் கையில் பெரிய தாக்கம் எதனை யும் ஏற்படுத்தாது என்று, ஜனா திபதியின் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கா வின் நிதி உதவியை 20 சதவீத த்தினால் குறைப்பதற்கு, அமெ ரிக்க காங்கிரஸுக்கு, இராஜாங்கச செயலர் ஜோன் கெரி பரிந்துரை

19 ஆம் பக்கம் பார்க்க

## தீயில் கருகியது வர்த்தக நிலையம் கிளிநொச்சியில் நள்ளிரவு அனர்த்தம்



கிளிநொச்சி மாவட்ட வைத் தியசாலைக்கு முன்பாக உள்ள கிளிநொச்சியின் பிரபல வர்த்தக நிலையங்களில் ஒன்றான குமர குரு பல்பொருள் வர்த்தக நிலை யம் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் தீ பிடித்து முற்றாக எரிந்து அழிந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரி யவருவதாவது, இரவு பதி னொரு மணியளவில் வர்த்தக நிலையத்திற்குள் இருந்து புகை வருவதாக காவலாளி உரிமை

19 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பஸ்தரை காணவில்லை

வெளிநாடு செல்வதற்கான விசா கிடைத்ததை நண்பர்களுக்கு சொல்லச் சென்ற இளம் குடும்பஸ்தர் காணாமல் போயுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் இளவாலை வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த பிரான் சிஸ் ஜெசிந்தன் (வயது-27) என்பவரே காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடானது இளவா லைப் பொலிஸ் நிலையத்திலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறுபான்மையினர் அதிருப்தி அடைவது இலங்கையில் மட்டுமல்ல



(கொழும்பு)

சிறுபான்மையினர் ஆளும் தரப்பு மீது அதிருப்தி கொள் வது இலங்கையில் மட்டுமல்ல உலகின் பிற நாடுகளிலும் அவ் வாறான நிலை உள்ளது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத் தாபய ராஜபக்ஷ தெரிவித்துள் ளார். கொழும்பு ஆங்கில ஊட கம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ வியில் அவர் மேலும் தெரி விக்கையில்,

இராணுவத்தினரிடம் சரண டைந்தவர்களை மட்டும் அரசாங் கம் புனர்வாழ்வளித்து விடுதலை

19 ஆம் பக்கம் பார்க்க

## போலி நாணயத்தாள்கள் யாழ். நகரில் தாராளம்

யாழ்ப்பாணத்தில் போலி நாணயத் தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. குறிப்பாக 5000 ரூபா பெறுமதியான போலி நாண யத் தாள்களை ஒரு கும்பல் புழக கத்தில் விடுவதாக யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் தெரிவித்துள் ளது. முச்சக்கர வண்டிகளில்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் போன சிறுவர்கள் மீட்பு

(கைதடி)

கைதடி சிறுவர் இல்லம் ஒன் றில் இருந்து தப்பி ஓடிய சிறுவ ர்களில் 12 பேர் மீட்கப்பட்டிருக் கின்றனர். இச்சிறுவர்கள் துஷ் பிரயோகத்திற்குட்படுத்தப்பட் டனரா? என்பது குறித்து தற் போது விசாரணைகளும் மருத் துவப் பரிசோதனைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கையை மேற் கொள்வதற்குச் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஏற்பாடுக ளில் இறங்கியுள்ளது.

மேலும் இரண்டு பேர் தங்கள சொந்த இடமான மாங்குளம் பகு தியில் சென்றுகொண்டிருந்த போது சிறுவர் நன்னடத்தை உத தியோகத்தரினால் மீட்கப்பட் டுள்ளதாகவும் தெரியவரு கின்றது.

இரவு குறித்த சிறுமிகளில் 8 பேர் யாழ். சாவகச்சேரி பொலி ஸாரினால் மருத்துவப் பரிசோத னைக்காக யாழ். போதனா மருத் துவமனையில் அனுமதிக்கப்ப ட்டனர்.

குறித்த சிறுமிகளை மருத்து வப் பரிசோதனைக்கு உட்படுத் தியபோது அவர்களில் நான்கு சிறுமிகளுக்கு பாலியல்

19 ஆம் பக்கம் பார்க்க

இன்றைய 5ஆம் பக்கத்தில்...

### விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள் 34

வே. அர்ச்சுணன்



# காரைநகர் பிரதேசசபை தலைவரின் செயற்பாடுகள் குறித்து விசனம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசசபை தவிசாளரினால் மேற்கொள்ளப்படும் அநாகரிகமான செயற்பாடுகள் குறித்து பிரதேச பொது மக்கள் விசனம் அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தவிசாளர் மது போதையில் இளைஞர்களையும், மக்களையும் தகாத வார்த்தைகளால் பேசுவது, அடிக்கச் செல்வது போன்ற சம்பவங்களால் மக்கள் விசனமடைவதுடன், அவர்கள் பொறுமை காத்துப் பலனில்லாது தவிசாளரைத் தாக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த புதுவருட தினமான ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காரைநகர் கற்பக விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவின்போது தவிசாளர் அங்கு அரச உத்தியோகத்தர் ஒருவரிடம் தகாத வார்த்தைகளால் பேசி அவரைத் தாக்க முற்பட்ட சமயம் ஆலயத்திற்கு வந்திருந்த பொதுமக்கள், இளைஞர்களால் தடுக்கப்பட்டு அவரை அவ்விடத்திலிருந்து கலைத்து விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த தவிசாளர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் மருத்துவமனைக்குச் செல்லாது போலியான மருத்துவச் சான்றிதழைக் காட்டி குறிப்பிட்ட அரச உத்தியோகத்தரும், இளைஞர்களும் தன்னைத் தாக்கியதாக முறைப்பாடு செய்துள்ளதாகவும், எனவே இதனை ஆராய்ந்த பொலிஸார் பொய்யான முறைப்பாடு எனத் தெரிவித்து எச்சரிக்கை செய்து தவிசாளரை விடுவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கணனி வகுப்புக்கள்

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினால் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கான கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.


பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவிரும்பும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகள் பளை, முல்லையடியில் இயங்கும் பேரவையின் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு தலைவர் கு.ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (11)

# மது அருந்தியதாலேய நீரில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் 20 மீற்றர் தூரத்தில் கடலில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவர் மது அருந்திய நிலையில் கடலில் மூழ்கி மூச்சுத்திணறி உயிரிழந்திருப்பதாக இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் தெரிவித்துள்ளார்.

சம்பவ நேரம் குறித்த நபர் ஆட்டோ ஒன்றில் ஏழு பேருடன் சேர்ந்து மது அருந்தியிருந்ததாகவும், அருகில் வேறு ஒரு சாராரிடையே சண்டை நடைபெற்றுக் கொண்டதனைப் பார்ப்பதற்காக இவர் சென்றிருந்ததாகவும், அதன் பின்னர் கடலில் மூழ்கி இறந்த நிலையில் சடலம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும், சடலத்தில் காயங்கள் எதுவும் இல்லை எனவும், மருத்துவ பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)



கரவெட்டிப் பிரதேச சபைக்கு அருகாமையில் அமைந்துள்ள மடத்தடிப் பிள்ளையார் முன் அமைந்துள்ள கேணி பாதுகாப்பற்ற முறையில் இருப்பதனால் எந்த நேரமும் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்குப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# போதை தலைக்கேறியதால் போத்தலை உடைத்து வயிற்றில் குத்து

(முழங்காவில்)

முழங்காவிலில் புதுவருட தினத்தன்று மதுபோதையில் இருந்த நால்வருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் சாராயப் போத்தலை உடைத்து வயிற்றில் குத்தப்பட்டு படுகாயமடைந்த ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், புதுவருட தினத்தன்று மாலை 4.30 மணியளவில் முழங்காவில் 31 ஆம் கட்டைப் பகுதியில் நால்வர் மது அருந்திய போது தகராறு ஏற்பட்டுள்ளது.

இதன்போது சகோதரர்கள் இருவர் போத்தலை உடைத்து மற்றொருவரின் வயிற்றின் மீது குத்தியுள்ளனர்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் சிவகுமார் (வயது-28) என்பவர் படுகாயமடைந்து கிளிநொச்சியில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்திய சகோதரர்கள் இருவரையும முழங்காவில் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். (09)

# தற்காப்பு வளர்ச்சிக் கழகத்தில் சேமித்த பணம் கிடைக்குமா?

(தம்பான்)

தென்மராட்சிப் பகுதி ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் கடந்த காலத்தில் தற்காப்பு வளர்ச்சிக் கழகம் ஒன்று இயங்கிய நிலையில், அக்கழகத்தில் பணத்தை கடன் அடிப்படையில் பெற்றவர்களும், சேமிப்புச் செய்தவர்களும் உண்டு.

கடந்த கால இடம்பெயர்வுகள் காரணமாக இக்கழகச் செயற்பாடுகள் யாவும் முடங்கிய நிலையில் உள்ளது.

தற்போது இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்ந்துள்ளனர். இந்தக் கழகத்தை சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் மீள ஆரம்பித்து கடனடிப்படையில், கடன் பெற்றவர்களின் பணத்தை அறவிட்டு சேமிப்புச் செய்தவர்களின் பணத்தை ஒப்படைக்க முன்வர வேண்டுமெனக் கழகத்தில் வைப்புச் செய்தவர்கள் கோருகின்றனர்.

அதேவேளை, சேமிப்புப் புத்தகத்தை வைத்துக்கொண்டு தமக்கு இப்பணம் இனியாவது கிடைக்குமா? என ஏங்கி நிற்பதையும் காண முடிகிறது. எனவே, பொதுமக்களின் இந்த அவலநிலையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (150)

# சைவ சமய அபிவிருத்திக் கழக திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை, சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம், சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, திருநாவுக்கரவு நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்த ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2 பாலர் பிரிவிலும், தரம் 3, 4 கீழ்ப்பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு மாசில் வீணையும் மாலை மதியமும், சொற்றுணை வேதியன் சோதி வானவன் ஆகிய இரு தேவாரங்களும்,

கீழ்ப்பிரிவுக்கு மாசில் வீணையும் மாலை மதியமும், சொற்றுணை வேதியன் சோதி வானவன், கூற்றாயினவாறுவிலக்ககிலீர் ஆகிய மூன்று தேவாரங்களும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர் வரும் 20 ஆம் திகதியாகும்.

இதற்கான பரிசில்கள் எதிர் வரும் மே மாதம் 4 ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குரு பூசை அன்று வழங்கப்படும்.

திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக் கழகம், அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரர்கரும், உதவிப் பரீடசைச் செயலாளருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

# கரணவாய்ப் பகுதியில் மாணவனைக் காணவில்லை

(கரணவாய்)

கரணவாய்ப் பிரதேசத்தில் மாணவன் ஒருவன் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில், புலோலி மேற்கைச் சேர்ந்தவரும், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி பயிலும் மாணவனுமான குலசிங்கம் சசிதரன் (வயது-19) என்பவரே காணாமல் போயுள்ளார்.

இம்மாணவன் புதுவருடப் பிறப்பன்று பிற்பகல் 3.00 மணியளவில் வத்தனைக்குச் செல்வதாக வீட்டிலிருந்து சைக்கிளில் சென்ற நிலையில் இதுவரை இம்மாணவன் வீடு திரும்பவில்லை என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)


## சிறுவிளம்பரம்

### படிவம் விற்பனையாகிறது


தேசியப் பாடசாலைகளில் பட்டதாரிகளை ஆசிரியர்களாக சேர்த்துக்கொள்வதற்கான படிவம் விற்பனையாகிறது. அத்துடன், கிராம அலுவலர் போட்டிப் பரீட்சைக்கான வலையின் நுண்ணறிவு + பொது அறிவு + G.S சம்பந்தான விடயங்கள் அடங்கிய விசேட வெளியீடு - 01 வெளிவந்து விற்பனையாகிறது. யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட வடமாகாணத்தின் முன்னணி புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும். தொடர்புக்கு :
சி.என்.எச்.சாள்ஸ் - 0776913337
(C/2516)

*********

### வீடு விற்பனைக்கு

சகல வசதிகளும் கொண்ட காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. குடியிருக்க அல்லது ஏதேனும் தொழிலுக்கு பாவிக்கக் கூடிய நல்ல சுற்றடாடலில் உண்டு.

தொடர்புகளுக்கு:
க.சீவறட்ணம்
சிவராசா,
சம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.
(R/176)

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த புதுவருட தினத்தில் நடைபெறும் சித்திரத் தேர்த் திருவிழாவில் விநாயகப் பெருமான் ஆலயத்தில் இருந்து சித்திரத் தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளி வரும் காட்சியையும், விநாயகப் பெருமான் தேரில் இருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிப்பதையும் காணலாம். (50)

# உவர்நீர் காற்றினைத் தடுக்க மரங்களை நாட்டவேண்டும்

## - விவசாய போதனாசிரியர் தெரிவிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிராமத்தின் கடற்கரை ஓரங்களில் சவுக்கு மற்றும் கண்டல் போன்ற மரங்களை நாட்டி அதனை வளர்த்துக் கொள்வதன் மூலம் கடலிலிருந்து வருகின்ற உவர்நீர்க் காற்றினை ஓரளவில் தடைசெய்வதுடன், நெடுந்தீவில் உள்ள அநேக இடங்களில் பல பயன்தரக் கூடிய விவசாயப் பயிர் உற்பத்திகளை மேற்கொள்ள முடியுமென நெடுந்தீவுப் பகுதிக்கான விவசாயப் போதனாசிரியர் நா.கோகிலராஜன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நெடுந்தீவில் உள்ள அநேகமான இடங்களில் பயனுள்ள பல விவசாய பயிர்வகைகளை உற்பத்தி செய்யக்கூடியதான நிலங்களைக் கண்டறிய முடிந்துள்ளதெனவும், இவ்வாறான இடங்களில் கடலில் இருந்து வீசப்படுகின்ற உவர்நீர்க் காற்றின் தாக்கங்களினால் அந்த நிலங்களில் விளைவிக்கப்படுகின்ற பயிர்வகைகள் கருகி அழிவுற்றுப் போகக்கூடிய கால நிலைகள் தென்பட்டு வருகின்றன.

எனவே, இவ்வாறான நிலையில் கடலிலிருந்து தரை மார்க்கமாக வீசப்படுகின்ற கடற் காற்றின் உவர்நீர்த் தன்மையினது தாக்கங்களை ஓரளவில் தடை செய்து கொள்ளும் வகையில் கடற்கரையோரங்களில் சவுக்கு மற்றும் கண்டல் மரங்களை நடுகை செய்து வளர்த்தெடுப்பதற்கு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான மரங்களை நடுகை செய்வதன் மூலம் கடற்காற்றின் உவர்த் தன்மைகள் கடற்கரையோரங்களில் நாட்டியுள்ள மரங்களில்ப் படுவதினால் உவர்காற்றின் தாக்கங்கள் பெருமளவில் குறைக்கப்படுகின்றன.

இதனால் அருகாமையில் உளள நிலங்களில் நாட்டி வைக்கப்பட்டிருக்கின்ற பயிர்களினது கருகுதல் தன்மைகளும் பயிரா படுகின்ற தன்மைகளையும் குறைத்துக் கொள்ளமுடியும்.

மேலும் நல்ல வருமானங்களைப் பெறக்கூடிய பயிர் வகைகளையும் நிலங்களில் நாட்டி வைக்க முடியும் என விவசாயப் போதனாசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# "சைவக்களஞ்சியம்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

மூதறிஞர் பண்டிதர் கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்களின் 'சைவக்களஞ்சியம்' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்த்தானத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பண்டிதர் கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்கள் நூலினை வெளியீட்டுவைக்க, கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியீட்டுரையை நிகழ்த்துவார். கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு நூல் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

கடந்த 23 வருடங்களாக குருக்கள் ஐயா தொகுத்துவந்த ஈழத்து தமிழகத்து அறிஞர்கள் 57 பேரின் கட்டுரைகளைத் தாங்கி 1500 ரூபா செலவில் 'சைவக்களஞ்சியம்' வெளிவருகிறது. (10)

# நிமோனியாக் காய்ச்சல்; குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக இறந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் சேர்க்கப்பட்ட மூன்றுமாத ஆண் குழந்தை நிமோனியாக் காய்ச்சல் காரணமாகவே உயரிழந்திருப்பதாக மருத்துவப் பரிசோதனையின் மூலம் தெரியவந்துள்ளது.

முழங்காவில் - நாச்சிக்குடாவைச் சேர்ந்த அன்ரனி குயின்றொக்சன் என்ற மூன்றுமாத ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை பெற்றோருடன் யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் காய்ச்சல் ஏற்பட்டு சுகவீனமுற்ற நிலையில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்க கெண்டுவரப்படும்போது உயிரிழந்திருந்தது. இதனை அடுத்து குழந்தை உயிரிழந்தமைக்கான காரணத்தை அறிய பிரேத பரிசோதனை மேற்கெள்ளப்பட்டது.

இந்தப் பரிசோதனையின் மூலம் குழந்தை நிமோனியாக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்திருப்பது தெரியவந்ததாகவும், உயிரிழந்த குழந்தையின் தந்தை தெரிவித்துள்ளார். (பா)

# வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(தொடர்ச்சி...)

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தபட்ட வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வலயக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

விபரம் வருமாறு,

திறந்தபோட்டி

மேடை நாடகம்

யா/ஹாட்லிக்கல்லூரி, யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/வட இந்துமகளிர் கல்லூரி.

திறந்தபோட்டி

நாட்டார் பாடல்

யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை, யா/ஹாட்லிக் கல்லூரி, யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்.

குழு 2

இசை

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், யா/ஹாட்லிக் கல்லூரி, யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

பிரிவு 3

தனி நடனம்

ம.மதுமிதா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆ.யவ்வனப்பிரியா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பி.சங்கவி (யா/புற்றளை மகா வித்தியாலயம்.)

பிரிவு 4

தனி நடனம்

ச.சரண்யா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சா.நோமிகா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சி.சிவாம்பிகை (யா/தொண்டைமானாறு வீ.ம.வித்தியாலயம்).

பிரிவு 2

தனி நடனம்

கி.தனபைரவி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சு.காருண்யா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சு.கம்ஷாயினி (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

பிரிவு 5

தனிநடனம்

ம.மயூதினி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), த.ஜெனோசன் (யா/ஞானாசாரியார் கல்லூரி).

திறந்தபோட்டி

தமிழறிவு வினாவிடை

யா/வட இந்து மகளிர் கல்லூரி, யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,

திறந்தபோட்டி

நடனம் குழு 1

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், யா/மணற்காடு றே.க.த.க.பாடசாலை.

திறந்தபோட்டி

நாட்டிய நாடகம் (ஆடல் கதை)

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. (முற்றும்....) (17)

# ஊடகத்துறைக்கான விருது; விண்ணப்பத்திகதி நீடிப்பு

(யாழ்.நிருபர்)

சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் முகமாக அதி உயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து முன்வந்துள்ளன.

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இலங்கையில் அச்சு ஊடகத்துறையில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் இவ் விருதினைப் பெறுவதற்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பத்தையும், அறிவுறுத்தற் கையேட்டினையும் இல 96, கிருவ வீதி கொழும்பு- 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கெள்ளமுடியும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 2013 ஏப்ரல் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டள்ளதாக இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (10)

# அரிசிமாவில் இருந்து உணவுகள்; மகளிருக்கான பயிற்சிப் பட்டறை

(வேலணை)

அரிசி மாவிலிருந்து பெறுமதிமிக்க உணவுப் பொருட்களைத் தயாரிப்பது தொடர்பான பண்ணைப் பெண்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பண்ணையில் நடாத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் தீவகத்தைச் சேர்ந்த நெடுந்தீவு மற்றும் வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளிலிருந்து 36 பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள பெண்களுக்கு அரிசி மாவில் இருந்து எவ்வாறான பெறுமதிமிக்க அதிக நாட்களுக்கு வைத்துப் பயன்படுத்தக்கூடிய உணவுப் பொருட்களைத் தயாரிப்பது தொடர்பான செய்முறைப் பயிற்சிகளை இது தொடர்பான வளவாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை நடாத்தவுள்ளார்கள்.

பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்ளவிருக்கின்ற பண்ணைப் பெண்களுக்கான உணவு மற்றும் சிற்றுண்டி வகைகளும் அன்றையதினம் இவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன. (05)



மல்லாவி பொலிஸ் பிரிவினரும், பாண்யன் குளம் துணுக்காய் பொதுமக்களும் இணைந்து அண்மையில் யோகபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் நடத்திய புதுவருட நிகழ்வில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட பாரம்பரிய தமிழ் சிங்கள வீடுகளின் அமைப்பைக் காணலாம். (140)

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஊடகப் பொறுப்பு என்பது என்ன?

உலகளாவிய ரீதியில் நாம் இன்று அறிந்து கொள்ளும் செய்திகள் எல்லாம் ஒருதலைப்பட்சமானவையே. பி.பி.சி. ஆகட்டும், சி.என்.என் ஆகட்டும் மற்றுமற்றும் உலகளாவிய செய்திச் சேவைகள் ஆகட்டும் எல்லாமே அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்ட மேற்கு நாடுகளின் கண்ணோட்டத்தை ஊதிப் பரப்புபவையே.

அவை தரும் செய்திகளிலிருந்தே நம் கருத்துக்கள் உருவாகின்றன. அரபு நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் மக்களைப் பாதுகாத்து, சுதந்திர ஜனநாயகச் சூழலை மேற்கு நாடுகள் அங்கு ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன போன்ற கதைகளுக்குள் நாமும் சிக்கிக் கொள்கிறோம்.

உலகளவில் தகவல் ஏகாதிபத்தியம் இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறதென்றால், உள்ஊரிலும் ஒரேவிதமான தகவல்களை விழுங்கியபடிதான் நாம் இருக்கிறோம். நீரோடுகிற திசையின் போக்கில் பொம்மைக் கப்பல்களை விட்டே பழக்கப்பட்டவை நமது ஊடகங்களும். மக்களிடம் விற்கக் கூடிய சரக்காக விறுவிறுப்புச் செய்திகளை மட்டும் எழுதிக் கொண்டிருப்பதில் களிபேருவகை கொள்ளக் கூடியவை.

ஜனநாயகத்தின் காவலர்களாக, மாற்றத்தின் தூதுவர்களாக இருக்க வேண்டிய ஊடகங்கள் மக்களது உணர்ச்சிகளை உசுப்பி, அவர்களை அடுத்த கட்டத்துக்கு நகர விடாமல் தடுத்து அப்பட்டமாக, இலாபத்தைத் தேடுவதையே ஒரே குறிக்கோளாக்கி விட்டன.

அரசதிகாரத்தின் மூன்று தூண்களாக உள்ள ஆட்சிமன்றம், நாடாளுமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றோடு, ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது. இவற்றில் முதல் மூன்று தூண்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏதாவது ஒரு வகையில் மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டவை.

ஆனால், இந்த மூன்றையும் கேள்வி கேட்கக்கூடிய நான்காவது தூணாகிய சுதந்திர ஊடகம், எந்தவகையிலும் மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லை என்பதுதான் வேடிக்கை! அதனால் எப்படி வேண்டுமானாலும் மக்களைத் தவறாக வழி நடத்துவதையும் ஒரு உரிமையாக எடுத்துச் செயற்பட முடிகிறது.

ஊடகம் தன் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டதாக இருக்க வேண்டாமா? அந்தப் பொறுப்பை ஊடகங்கள் தாங்களாகவே உருவாக்கிக் கொள்ள வேண்டாமா?

அந்த ஜனநாயகக் கடமையைத் தட்டிக்கழிக்கின்றன என்பதே நாம் கண்டுகொண்டிருப்பது. வறிய நிலையில் வாழ்வாதாரங்கள் இல்லாத நிலையில் மக்கள் வாடுகிறார்கள் என்பதான யதார்த்த நிலைமைகளை இவை வெளிப்படுத்துவதில்லை. அல்லலுறும் அடித்தள மக்களின் குரலாய், அவர்களின் தேவைகளைப் புரிந்து வெளிப்படுத்துவதற்கு மாறாக, சமுதாயத்தில் மிகச் சிறியதொரு பகுதியினரின் நலன்களைப் பாதுகாக்கிற, அவர்களது ரோசங்களையும் வீம்புகளையும் முன்னிலைப்படுத்துகிற வேலையைத்தான் இந்த ஊடகங்கள் செய்கின்றன.

உதாரணத்திற்கு, பெருமளவில் பாதிப்புகளை இன்று அடைந்து கொண்டிருக்கும் வடபகுதி மீனவர்களின் பிரச்சினையை உள்ளபடி வெளிப்படுத்த ஊடகங்கள் தயங்குவதைக் கவனிக்க முடியும். அதேபோல, எந்த நடைமுறைச் சாத்தியமான கோரிக்கைகளையும் மேலெழுப்பாமல் வெறும் உணர்ச்சிகரமாகப் பொங்கி அடங்கும் தமிழக மாணவர் போராட்டத்தின் குறைகளையும் சொல்வதில்லை; மீண்டும் வெறும் வீண் கனவுகளை மக்களுக்கு ஊட்டும் விதமான உணர்ச்சித் தீவிரங்களையே பிரபலப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

நாட்டு மக்கள் மேலும் மேலும் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டவர்களாக இருப்பதை விட, அவர்களை வெறும் ஆவேசத்தில் பொங்கிக்கொண்டு, அழுந்திச் சுமை சுமப்பவர்களாக மாற்றுவதற்குத்தான் இந்த ஊடகங்கள் செயல்படுகின்றன.

ஊடகங்களின் சுதந்திரத்திற்கு முன்பதாக ஊடகங்களிடமிருந்து சுதந்திரத்தை நாம் பெற்றாகவேண்டும். - ஆசிரியர்

# சொத்து விபரச் சட்டம் கேலிக்குரிய விடயமாகும்

## அனுரகுமார திசாநாயக்க

(கொழும்பு)

சொத்து விபரம் தொடர்பான சட்டம் கேலிக்குரிய விடயமாகியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரான்சின் அமைச்சர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிடுவதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்தது. நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஒலன்ட் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

இதன் மூலம் ஜனாதிபதி பிரான்சுவா ஒலன்டின் சோசலிச அமைச்சரவையில் குறைந்தது நான்கு செல்வந்தர்கள் உள்ளமை தெரியவந்துள்ளது. அமைச்சர் ஒருவரின் மறைமுக வெளிநாட்டு வங்கிக்கணக்கு தொடர்பில் ஏற்பட்ட மக்கள் கொந்தளிப்பை அடுத்து, அனைத்து அமைச்சர்களும் தமது தனிப்பட்ட சொத்து விபரங்களை வெளியிட வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது. 37 பேரைக் கொண்ட பிரான்ஸ் அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சர் லோரன் பபியஸ் 6 மில்லயன் யூரோ பெறுமதியான சொத்துக்களைக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

முதியோர் விவகாரங்களுக்கான அமைச்சருக்கு 5 மில்லியன் யூரோக்கள் பெறுமதியான சொத்துக்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோருக்கு ஒரு மில்லியன் யூரோக்களுக்கும் அதிகமாக சொத்துக்கள் உள்ளமை தெரியவந்துள்ளது. இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின் போது எமது நாட்டிலும் அமைச்சர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும் எனப் பலரும் குறிப்பிட்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க இது குறித்து தெரிவிக்கையில், எமது நாட்டில் சொத்து விபரம் தொடர்பான சட்டம் கேலிக்குரிய விடயமாக மாறியுள்ளது என்றார்.

# கஹட்டகஸ்திகிலியவில் மினி சூறாவளி

(கொழும்பு)

கஹட்டகஸ்திகிலியவில் நேற்று செவ்வாய்க்கிழமை வீசிய மினி சூறாவளியால் சுமார் 75 வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த வீடுகளின் கூரைகளே காற்றில் அள்ளுண்டு சென்றுள்ளன. இதனால சிலருக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மரக்கிளைகள் முறிந்து விழுந்தமையினால் அந்தப் பிரதேசத்தில் மின்சாரம் மற்றும் நிலையான தொலைபேசி சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தனியார் பேருந்துகளுக்கு எதிராக 149 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் அதிக கட்டணம் அறவிட்ட தனியார் பேருந்து தொடர்பில் 149 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 1955 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன குறிப்பிட்டார்.

கடந்த வருடம் புத்தாண்டு காலப்பகுதியில் நாளொன்றுக்கு சுமார் 250 முறைப்பாடுகள் கிடைத்த போதிலும் இம்முறை 5 தினங்களுக்கு 149 முறைப்பாடுகள் மாத்திரமே பதிவாகியுள்ளன. அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் இடம்பெறும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்பிற்கு திரும்புவதற்கு எதிர்வரும் 20ஆம் திகதி வரை விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன மேலும் தெரிவித்தார்.

# அதிகாரியை தாக்கிய கைதி தப்பி ஓட்டம்

(கொழும்பு)

மொனராகலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவருக்காக பாதுகாப்புக் கடமையிலிருந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். பாதுகாப்பு அதிகாரியை கண்ணாடிப் போத்தலினால் தாக்கியுள்ள கைதி வைத்தியசாலையை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இத் தாக்குதலின் காரணமாக படுகாயமடைந்த சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரி அவ் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மொனராகலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு 22 இல் புதிய மாணவர்கள் இணைப்பு

(கொழும்பு)

கல்வி நடவடிக்கைகளுக்காக சப்ரகமுவ பல்கலைக்கழகம் நேற்றுத் திறக்கப்படவில்லை என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் என உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் மாணவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

இதனால் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உயர் மாணவர்களுடைய கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள கல்வி அமைச்சு, மே மாதம் 6ஆம் திகதி அவர்களுடைய கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

# கர்ப்பிணி ஆசிரியை தீக்குளிப்பு கணவன் தூக்கிட்டு தற்கொலை

கணவன் தொடர்ச்சியாக மது அருந்தியமையின் காரணமாக அவமானம், கவலை அடைந்த ஆசிரியை ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். கம்பொல, புசெல்ல, நவகடதொர என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கணவனது செயல் தாங்கமுடியாது தற்கொலை செய்து கொண்ட பெண் நவகடதொர பிரதேச பாடசாலை ஒன்றின் ஆசிரியை எனத் தெரியவந்துள்ளது.

இவ் ஆசிரியை நேற்று முன்தினம் மாலை வேளையில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மனைவியின் உயிரிழப்பு காரணமாக மன உளைச்சலுக்கு உள்ளான கணவன் நேற்றுக் காலை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட ஆசிரியை கர்ப்பிணி எனப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 34

**வே. அர்ச்சுணன்**

அன்ரன் பாலசிங்கம் சம்பந்தனிடம் நக்கலாகக் கேட்ட பெண் வேறு யாருமல்ல இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தான் அவர். உங்கட ஆள் என்ன செய்கிறா இப்ப? என்று சம்பந்தனிடம் பாலசிங்கம் நக்கலாகக் கேட்டது சந்திரிகாவையே. அரசியல் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுடன் உரையாடுகின்ற விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி அல்லது மத்தியகுழு உறுப்பினர்களாக இருந்தாலும் சரி மிகுந்த அவதானத்துடனேயே தங்களது உரையாடல்களை மேற்கொள்வார்கள். பிற அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனோ அல்லது வெளிநாட்டு பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் போன்றோருடன் உரையாடுகின்ற பொழுது தங்களது கருத்தாடல்களில் ஏதாவது பிழைகள் இருந்துவிட்டால் பிறகு அதனால் ஏற்படும் விளைவுகள் பாதிப்புகள் என்பனவற்றிற்கான முழுப் பழியையும் தங்கள் மீதே போட்டுவிடுவார்கள் என்ற அச்சம் அவர்களிடையே இருந்தது. தண்டனை எப்படியிருக்கும் என்பதும் அவர்கள் அறிந்ததே. ஆனால், அன்ரன் பாலசிங்கத்தைப் பொறுத்தவரையில், எவருடனும் நக்கல் நையாண்டியுடனேயே தனது இராஜ தந்திர உரையாடல்களையும் நடத்துவார். ஆட்களுக்குத் தக்கபடி கொச்சைத்தன்மையின் அளவும் கூடிக் குறையும்.

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்பில் பிரபாகரன் தொடக்கம் பொட்டம்மானில் இருந்து பலருக்கும் கடுமையான ஆட்சேபனைகள் இருந்தபோதிலும் அதனை வெளிப்படையாகக் கூறாமல் சிரித்தவாறு உறவாடிக்கொண்டு, வெகு கவனமாக அவர்கள் தொடர்பில் தங்களது புலனாய்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தார்கள். ஆனால் அன்ரன் பாலசிங்கம் இந்தக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதில்லை. தனது மனதில் பட்டதை நையாண்டியும் கொச்சையுமாகக் கூறிவிடுவார்.

சம்பந்தன் மீது புலிகள் கடுமையான அதிருப்தியுடன் இருந்து வந்தனர். அதாவது சம்பந்தன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கடுமையான விசுவாசியாகவும் அவருக்கு நெருக்கமான அரசியல் ஆலோசகராகவும் ஒரு கட்டத்தில் செயற்பட்டு வந்தார். வெளிப்படையாக தமிழ் மக்கள் மீது தான் கரிசனையுடையவர்போன்று சம்பந்தர் காட்டிக்கொண்ட போதிலும் மறைமுகமாக தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் நிகழ்ச்சி நிரலுடனேயேசம்பந்தன் செயற்பட்டு வருவதாக புலிகள் கருதினர். குறிப்பாக அரசியல் தீர்வை இழுத்தடிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு ஆலோசனைகளை வழங்கி வந்ததுடன் இந்தியாவுடன் இராஜதந்திர ரீதியிலான உறவினை வைத்திருந்த சம்பந்தன் இலங்கை தொடர்பில் இந்தியா ஆட்சேபனை தெரிவிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சம்பந்தன் இலங்கை ஜனாதிபதியின் நடவடிக்கைகளை இந்தியாவிடம் நியாயப் படுத்தி வருகிறார் என்ற பார்வை புலிகளிடம் இருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் விசுவாசியாகவும், தங்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டிலும் செயற்பட்டு வருகிறார் என்று புலிகள் சம்பந்தன் மீது ஆத்திரம் கொண்டிருந்தனர். அவரது நடவடிக்கைகளையும், விசுவாசத்தையும் பாராட்டும் விதத்தில் ஜனாதிபதி சந்திரிகாவினால் சம்பந்தனிற்கு குண்டு துளைக்காத பென்ஸ் கார் ஒன்றும் பரிசளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் விசேட கொமாண்டோப் பாதுகாப்பும் சம்பந்தனிற்கு அந் நாட்களில் வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயங்கள் புலிகளை கடுமையாக எரிச்சலடைய வைத்திருந்ததுடன் சம்பந்தனை போட்டுத் தள்ளுவதற்கென புலிகளின் புலனாய்வுத் துறை பிரிவொன்றும் களம் இறங்கியிருந்தது.

அந்த புலனாய்வுத் துறை நடவடிக்கைகளை பார்ப்பதற்கு முன்னர், இவ்வாறு சம்பந்தன் தொடர்பில் புலிகள் கடுமையான அதிருப்தியுடன் இருந்த காலப் பகுதியில்தான் சம்பந்தனையும், புலிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டினை ஊடகவியலாளர்களான டி.சிவராம், இரா.துரைரட்ணம், ஜெயானந்த மூர்த்தி போன்றவர்கள் மேற்கொண்டு வந்தனர். இதன் விளைவாக சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக மாறி புலிகளின் அபிமானியாக மாறத் தொடங்கினார். இவ்வாறு மாறி இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான் லண்டனில் இருந்தவாறு அன்ரன் பாலசிங்கம் நக்கலாக உங்களது பழைய ஆள் என்ன செய்கிறா? என்ற கேள்வியைக் கேட்டு சம்பந்தரை திக்குமுக்காடச் செய்தார்.

புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு, அவர்கள் உருவாக்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக ஆனபிறகும் கூட, இவ்வாறு ஒவ்வொரு உரையாடலின் போதும் பாலசிங்கம் தன்னுடன் நக்கலாகவும் கொச்சையாகவும் கதைத்து வந்தது சம்பந்தனிற்கு புண்ணில் புளி விடும் எரிச்சலூட்டுகையாகவே இருந்து வந்தது. ஒரு தடவை கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்திப்பதற்காக வன்னிக்கு வந்திருந்த கூட்டமைப்பினர் சந்திப்பு முடிந்து வெளியில் சென்ற பின்னர் சம்பந்தர் தமிழ்ச் செல்வனை தனியே சந்திக்க விரும்புவதாக ஒரு கோரிக்கை விடுத்தார். இக் கோரிக்கையை ஏற்று சம்பந்தரும், தமிழ்ச்செல்வனும் தனியே சந்திப்பதற்கு காத்திருந்த பொழுது வெளியில் சென்ற இதர கூட்டமைப்பினர் தங்களைப் பற்றி சம்பந்தர் ஏதோ போட்டுக் கொடுக்கப்போகிறார் என எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டு சென்றனர்.ஆனால், தமிழ்ச்செல்வனிடம் சம்பந்தன் முறையிட்டதோ வேறு. அன்ரன் பாலசிங்கம் தன்னுடன் நக்கலாகவும், நையாண்டியாகவும் கடுமையான வார்த்தைகளுடன் கதைப்பதாகவும் தனது அரசியல் வாழ்வில் பெரும் அதிர்ச்சி தரும் வார்த்தைப் பிரயோகங்களை அன்ரன் பாலசிங்கம் பிரயோகிப்பதாகவும், சம்பந்தன் குறைப்பட்டுக் கொண்ட பொழுது தமிழ்ச் செல்வன் தனது வழமையான பாணியில் "பாலா அண்ணைக்கு வயது போய்விட்டது. அந்தாள் அறளை பேர்ந்துள்ளதால் அப்படிக் கதைக்கிறார். அவர் கதைக்கின்ற நல்ல விடயங்களை கவனத்தில், எடுங்கள் மற்ற விடயங்களை கேட்காதது போன்று விட்டுவிடுங்கள்" என்று சம்பந்தரிற்கு சமாதானம் கூறுகிறார். அப்போதும் சமாதானம் அடையாமல் வாட்டத்துடன் நின்றிருந்த சம்பந்தரை தமிழ்ச்செல்வன் "இந்த விடயம் தொடர்பில் நான் தலைவரின் கவனத்திற்கும் கொண்டு செல்வேன்" என்று பலவாறு தேறுதல்கள் கூறியே படாத பாடுபட்டு அனுப்பி வைக்கிறார்.

இதன் பின்னர் அன்று மாலை அன்ரன் பாலசிங்கம் தமிழ்ச் செல்வனுடன் வழமை போன்று கதைத்தபோது பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவரும் உரையாடிய, பின் ஒரு கட்டத்தில் சம்பந்தரின் சந்திப்புத் தொடர்பிலும் அவர் வெளியிட்ட ஆதங்கம் தொடர்பிலும், தமிழ்ச்செல்வன் பாலசிங்கத்திடம் தெரியப்படுத்துகிறார். பாலசிங்கம் சிரித்துக் கொண்டே "நீங்கள் தடவிக் கொண்டு சிரித்துக்கொண்டு அரசியல் செய்வீர்கள் எனக்கு அது தெரியாதடா தம்பி... நான் மனதில் பட்டதை வெளிப்படையாகச் சொல்லித்தான் அரசியல் செய்வேன். நான் கதைப்பதை நிறுத்த வேண்டுமென்று பிரபாகரனோ அல்லது நீயோ சொன்னால் நான் நிறுத்தி விடுவேன். அல்லது நீங்கள் தண்டனை தரவேண்டும் என்று எண்ணினாலும் தயாராகவே இருக்கிறேன். ஆனால் நான் கதைக்கின்ற தொனியை சம்பந்தனிற்காக மாற்றமுடியாது" என்று தமிழ்ச் செல்வனிடம் கடுமையாக பாலசிங்கம் சொல்லிவிடுகிறார். அதற்கும் தமிழ்ச்செல்வன் சிரித்தவாறு "நான் உங்களை கதைக்க வேண்டாமென்று சொல்லவில்லை, தலைவரும் கடைசி வந்தாலும் அப்படிச் சொல்லமாட்டார். இவங்கள் கள்ளன்கள் அண்ணை... சில விடயங்களை நாங்கள் கதைக்கமுடியாமல் இருக்கிறோம். இதைக் கதைப்பதற்கு உங்களால் மட்டுமே முடியும். நீங்கள் வழமைபோன்று கதையுங்கள் எங்களிடம் முறையிட்டால் நாங்கள் பாலா அண்ணை வயது போய் கதைக்கிறார் அதை பெரிதுபடுத்த வேண்டாம் என்று சமாளிப்போம்" என்று கூறிப் பெரிதாகச் சிரிக்கிறார். "நான் இப்பொழுதும் இளமையுடனும், இளைஞன் போன்றே எனது வெள்ளைக்கார மனுசியுடன் இருக்கிறேன். நீர் என்னை வயது போன கிழவன் ஆக்கி அடேல் அன்ரியை பிரிக்க நினைக்கிறீரா?" என பாலசிங்கம் நக்கலாகக் கேட்க தொடர்பும் துண்டிக்கிறது. பின்னர் என்ன நடந்தது என்பதை தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா? அல்லது அறிந்தும் அறியாமல் மௌனம் காத்தனவா என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)



**சம்பந்தரும், தமிழ்ச்செல்வனும் தனியே சந்திப்பதற்கு காத்திருந்த பொழுது வெளியில் சென்ற இதர கூட்டமைப்பினர் தங்களைப் பற்றி சம்பந்தர் ஏதோ போட்டுக் கொடுக்கப்போகிறார் என எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டு சென்றனர். ஆனால், தமிழ்ச்செல்வனிடம் சம்பந்தன் முறையிட்டதோ வேறு. அன்ரன் பாலசிங்கம் தன்னுடன் நக்கலாகவும், நையாண்டியாகவும் கடுமையான வார்த்தைகளுடன் கதைப்பதாகவும் தனது அரசியல் வாழ்வில் பெரும் அதிர்ச்சி தரும் வார்த்தைப் பிரயோகங்களை அன்ரன் பாலசிங்கம் பிரயோகிப்பதாகவும், சம்பந்தன் குறைப்பட்டுக் கொண்டார்.**

# இலங்கையில் தொழிற் பயிற்சிபெற்ற நிர்மான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிர்மான திட்ட வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ள இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்து, அந்த வெற்றிடங்களில் நம்நாட்டில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களை அரசு நியமிக்கும் என்று தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய கொள்கை பிரகடனத்தின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிர்மானத் திட்டங்களில் இந்திய தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதென்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அடுத் தாண்டுகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு இந்திய தொழிலாளர்களை நியமிப்பது கணிசமான அளவு குறைக்கப்படும்.

கொழும்பு “டொக்யார்ட்” என்ற கொழும்புத் துறைமுகத்தில் இருக்கும் கப்பல் கட்டும் தொழிற்சாலையில் சும்ர்ர் 800 பயிற்றப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். அத்துடன் உருக்கு தொழிற்சாலைகளில் 1500 இற்கும் அதிகமான இந்தியத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

அரசாங்கம் முதலீட்டு சபைகபு முதலீட்டுத் திட்டங்களுக்கு சேர்க்கப்படும் இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. இந்தியர்கள் செய்யும் தொழிலில் பயிறசி பெற்றவர்கள் போதியளவு இலங்கையில் இருந்தால் அப்பதவிகளுக்கு இலங்கையரையே நியமிக்க வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அகில இலங்கை துறைமுக கப்பல் கட்டும் தொழிலாளர் சங்கத்தின் தலைவரான அமைச்சர் தினேஷ் குணவர்தன, இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் நம்நாட்டவர்களுக்கு கூடுதலான சந்தர்ப்பதை வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் இல்லை

## மாதுலுவே சோபித தேரர்

(கொழும்பு)



எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் எதுவும் கிடையாது என மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுவான வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எவ்வித உத்தேசமும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறெனினும், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க இணங்காவிட்டால், மாற்று வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்து தேர்தலில் களமிறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த சிந்தனைக் கோட்பாடுகளின் மிக முக்கியமான விடயங்களில் ஒன்றான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. யாரைப் பொது வேட்பாளராக நியமிப்பது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மனித உரிமைகள் குறித்து பிரித்தானியா கவலை

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இலஙகை மனித உரிமை நிலைமைகள் திருப்தி அடையும் வகையில் அமையவில்லை என சுட்டிக் காட்டியுள்ளது. கடந்த ஆண்டில் பல பாதகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக கருத்து சுதந்திர முடக்கம், நீதிமன்றின் சுயாதீனத் தன்மைக்கு எதிராக செயற்படல், ஊடக சுதந்திர முடக்கம் போன்றன தொடர்பில் திருப்தி அடைய முடியா என தெரிவித்துளளது. சட்டவிரோத ஆட்கடத்தல்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான ஒடுக்குமுறைகள் உள்ளிட்ட பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் 2012 ஆம் ஆண்டிலும் நீடித்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

2011 ஆம் ஆண்டில் காணாமல போன லலித் குமார் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் நடத்தப்படவில்லை என தெரிவித்துள்ளது.

# தனியான நிர்வாக முறைமை வடக்கு-கிழக்கிற்கு பொருத்தமற்றது

(கொழும்பு)



வடக்கு - கிழக்கிற்கு தனியான நிர்வாக முறைமை பொருத்தமற்றது” என பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் புலிகளின் கோரிக்கைகளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர தொடர்நதும் முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தையோ அல்லது அதற்கு அப்பாலான தீர்வுத்திட்டத்தையோ கூட்டமைப்பு விரும்பவில்லை.

மாறாக வடக்கு-கிழக்கில் தனியான நிர்வாக அலகு ஒன்றை உருவாக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடுதல் அவதானம் செலுத்தி வருகிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனியான நிர்வாக அலகு குறித்த யோசனைகளை முன்வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்ட போதிலும், அவர்களின் குடும்பங்கள் அங்கு தங்க வைக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் வடக்கு-கிழக்கு மக்களுக்கு அரசாங்கம் பல்வேறு வழிகளில நிவாரணங்களையும் உதவிகளையும் வழங்கி வருகிறது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு உண்மையைக் கண்டறியவோ அரசாங்கத்திடம் கேள்விகளை எழுப்பவோ இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சி “அவுட்லுக்” சஞ்சிகை தகவல்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த பொருளாதார நிலைப்பாடு பற்றிய ஆசிய அபிவிருத்தி ‘அவுட்லுக்’ 2013 சஞ்சிகையில் இலங்கையின் பொருளாதாரம் இவ்வாண்டில் 6.8சதவீதமாகவும் 2014 இல் 7.2 சதவீதமாகவும் வளர்ச்சியடையும் என்ற மகிழ்ச்சிக்குரிய ஆதாரபூர்வமான தகவலை வெளியிட்டுள்ளது.

2012 இல் கைத்தொழிறதுறை இரண்டு மடங்கு வளர்ச்சியடைந்து 10.3 சதவீதமாக உயர்ந்திருந்தது. அதைவிட நிர்மானத் துறையின் வளர்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது

இலங்கையில் வறட்சி காரணமாக விவசாயத்துறை மந்த நிலையில் இருந்த போதிலும், இவவிதம் பொருளாதார வளர்சசி ஏற்பட்டிருப்பது பாராட்டக்கூடிய விடயமென்றும் அந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் நேரடியான முதலீடு 2012 ஆம் ஆண்டில் 2011 ஆம் ஆண்டில் இருந்ததைப் போன்று ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற இலக்கில் ஸ்திரமாக இருந்து வருகின்றது.

2013 இல் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி சற்று மந்தமாக 4 சதவீதமாகவே வளர்ச்சியடைந்துள்ள போதிலும், 2014 இல் அது 10 சதவீதமாக உயரும் என்றும் இந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

# தென்கொரியாவுக்கான தொழில் விசா தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

தென்கொரியாவுக்கான தொழில் விசா வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அங்கு நிலவுகின்ற அசசுறுத்தலான அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணிமனை தெரிவித்துள்ளது.

வருடாந்தம் இலங்கையில் இருந்து 5 ஆயிரம் பேர் தென்கொரியாவுக்கு வேலை வாய்புகளுக்காக செல்கின்றனர்.

தற்போது அங்கு 25 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றி வருகின்றனர். எனினும் தென்கொரியாவுக்கும், வடகொரியாவுக்கும் இடையில் எப்போது வேண்டுமானாலும் யுத்தம் ஏற்படலாம் என்ற நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் 90 சதவீதமான தென்கொரிய தொழில் விசாக்கள் கிடப்பில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கா சென்றுள்ள பொதுபல சேனாவுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலும் தமது அமைப்பைப் பரப்பிப் பலப்படுத்தும் நோக்குடன் அமெரிக்கா சென்றுள்ள பொதுபல சேனா அமைப்புக்கு அங்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பிரதிநிதிகள் தங்கியிருக்கும், கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள விகாரையின் நிர்வாகமே இந்த எதிர்ப்பைக் கிளப்பி உள்ளது. அவர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேற்றுமாறு விகாரையின் தலைமைப் பிக்குவிடமும் நிர்வாகம் வலியுறுத்தியுள்ளது.

விகாராதிபதி வண. சுமண தேரரின் நடவடிக்கையால் நாம் பெரிதும் குழப்பமடைந்துள்ளதுடன், விசனமும் அடைந்துள்ளோம். விகாரை நிர்வாகத்துடன் கலந்தாலோசிக்காமல் சுமண தேரர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். விகாராதிபதியை சந்தித்த ஆலய நிர்வாகம், பொதூ பல சேனா பிரதிநிதிகளை விகாரையில் தங்க அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர்களுடன் சேர்ந்து போதி பூஜை நடத்த வேண்டாம் என்றும் வலியுறுத்தினோம் என விகாரை நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கலிபோர்னியாவின் சிறிரட்ண விகாரை பொது பல சேனாவுக்கு ஆதரவு அளிக்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு என்றும் நிர்வாகம் கூறுகின்றது.

விகாரை வளாகம், வெறுபபை வளர்ப்பதற்கும், தீவிரவாதக் குழுக்களை ஊக்குவிப்பதற்கும் பயன்படக்கூடாது என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்கா - இலங்கை ஒத்திசைவுக்கொள்கை அவசியம்

(கொழும்பு)



இலங்கைக்கான நிதி உதவியைக் குறைக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் தீர்மானம் “துரதிஷ்டவசமானது” அமெரிக்காவுடன் இலங்கை ஒத்திசைவான வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இலங்கைக்கான பொருளாதார நிபுணரும், ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

வெட்டப்படவுள்ள நிதி உதவித் தொகை பெரியளவிலானது அல்ல என்பதால், இது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

ஆனால், இது பெரிய தொகையா சிறிய தொகையா என்ற விவகாரம் அல்ல.

இது சிந்திக்க வேண்டிய விவகாரம். புலிகளைத் தோற்கடிக்க உதவிய நாடு என்ற வகையில் இலங்கை யைப் பொறுத்தவரை அமெரிக்கா ஒரு முக்கியமான நாடு.

புலிகளைத் தடை செய்ததன் மூலம் அவர்களின் அனைத்துலக நிதி வலையமைப்பை அமெரிக்க வரண்டு போகச் செய்தது. அவர்கள் தமது இராணுவப் புலனாய்வுத் தகவல்களை எம்முடன் பகிர்ந்து கொண்டனர. அது, போரில் நாம் வெற்றி பெறுவதற்கு உதவியது.

இலங்கையின் மிக முக்கியமான வர்த்தகப் பங்காளியாகவும் அமெரிக்கா உள்ளது. இலங்கையின் ஆடை உற்பத்தியில் 40 சதவீதத்தை அந்த நாடு தான் கொள்வனவு செய்கிறது. நாம் அமெரிக்காவை இலங்கையின் நண்பனாகப் பார்க்க வேண்டும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், மென்பானங்களில் இருந்து ஐபோன், ஐபாட் வரை, இலங்கையில் பெரியளவில் அமெரிககாவின் தலையீடு உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் உறவுப்பாலத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமான தேவையாகும்.

# பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் தமிழ் - சிங்கள புதுவருட விழா

(குருநகர்)

வடமாகாண - பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், விளையாட்டுத் திணைக்களமும் இணைந்து நடாத்தும் 2013 தமிழ் - சிங்கள புதுவருடவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை யாழ்.சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, சிறப்பு விருந்தினர்க ளாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுமெனவும் இதில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (68)

# டிப்ளோமா பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

(யாழ்.நிருபர்)

நாடெங்கிலும் உள்ள கல்வியியற் கல்லூரிகளில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

2010/2012ஆம் கல்வி ஆண்டில் கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரிய முன்பயிற்சி டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 2800 டிப்ளோமாதாரிகளுக்கு எதிர்வரும் 22ஆம் திகதி நியமனம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.


நாடு முழுவதிலுமுள்ள 17 கல்வியியற் கல்லூரிகளிலும் 60இற்கும் மேற்பட்ட கற்கைத் துறைகளில் டிப்ளோமாப்பட்டம் பெற்றவர்களில் 825பேர் தமிழ் மொழி மூல டிப்ளோமாதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.(10)

# எள்ளு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

(வேலணை)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் எள்ளுப் பயிர் உற்பத்தியினை அதிக அளவில் உண்டாக்கும் முயற்சியினை மேற்கொள்ளும் முகமாக அந்தப்பகுதிக்குப் பொறுப்பான விவசாயப் போதனாசிரியர் நா.கோகிலராஜன் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

நெடுந்தீவில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகளில் எள்ளுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு எள்ளுப் பயிரானது பூத்துக் காய்க்கும் பருவத்தினை எட்டியுள்ளதாகவும் குறிப்பிட்ட விவசாயப் போதனாசிரியர் எதிர்காலத்தில இந்தக் கிராமத்தில் அதிக அளவில் எள்ளுப்பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.(05)



பாண்டியன் குளம் பாலியாற்றுப் பாலம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. இதனால் தற்போது போக்குவரத்துக்கள் சிரமமின்றி இடம்பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். பாலத்தின் தோற்றத்தைக் காணலாம். (140)

# யாழ்.பிறவுண் வீதி புனரமைப்பு எப்போது?

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் பிறவுண்வீதி மக்கள் பயணம் செய்ய முடியாத அளவிற்கு மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இவ்வீதியின் அவலநிலை பற்றி ஏற்கனவே தினமுரசு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபை இவ்வீதியைத் திருத்த நடவடிக்கை எடுத்தது.

வீதி திருத்த வேலைகளுக்காக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாழ்.மாநகர சபையினரால் கற்கள் பறிக்கப்பட்டுள்ள போதிலும் வீதி திருத்த வேலைகளை மாநகரசபை தாமதித்து வருவதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியால் பயணிப்போர் கற்கள் பறிக்கப்பட்ட நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படும் வீதியில் பயணம் செய்யும் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவ் வீதித் திருத்த வேலைகளை விரைந்து முன்னெடுக்கவேண்டுமென மாநகர சபையினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (10)



# பரிசுத் தொகை அதிகரிப்பு



(பரிஸ்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டி பரிசில் அடுத்த மாதம் (மே) 26ஆம் திகதி முதல் ஜூன் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான ஒட்டுமொத்த பரிசுத்தொகை 17.6 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி இந்த ஆண்டுக்கான போட்டியில் மொத்தம் ரூ.157 கோடி பரிசுத்தொகையாக வழங்கப்படுகிறது. இது 2012ஆம் ஆண்டை விட ரூ.23 கோடி கூடுதலாகும். ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்லும் வீர, வீராங்கனைக்கு தலா ரூ.10 கோடி வீதம் (கடந்த ஆண்டு ரூ.9 கோடி) கிடைக்கும்.

மேலும் 2ஆவது, 3ஆவது, 4ஆவது சுற்றுக்களில் தோற்று வெளியேறும் வீரர்களுக்கான பரிசுத்தொகையும் 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2016ஆம் ஆண்டு பிரெஞ் ஓப்பனுக்குள் மேலும் ரூ.71 கோடி பரிசுத்தொகை உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# இறுதிப் போட்டியில் செல்சி

(லண்டன்)

செல்சி அணிக்கு எதிரான எப்.ஏ. கால்பந்து தொடரின் அரையிறுதியில், மான்செஸ்டர் சிட்டி அணி வெற்றி பெற்றது. லண்டனில் நடந்த எப்.ஏ. கால்பந்துத் தொடரின் அரையிறுதியில், மான்செஸ்டர் சிட்டி, செல்சி அணிகள் மோதின. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய மான்செஸ்டர் சிட்டி அணிக்கு, போட்டியின் முதல் பாதி யில் சமிர் (35ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு செல்சி அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. இதனால், போட்டியின் முதல் பாதியில் மான்செஸ்டர் சிட்டி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் தொடர்ந்து அசத்திய மான்செஸ்டர் சிட்டி அணிக்கு செர்ஜியோ (47) ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். செல்சி அணிக்கு டெம்பா (66ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், மான்செஸ்டர் சிட்டி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. மே 11இல் லண்டனில் நடக்கும் இறுதிப் போட்டியில் மான்செஸ்டர் சிட்டி, விகான் அத்லெடிக் அணியை எதிர்கொள்கிறது.

# ரொனால்டோ அசத்தல் வென்றது ரியல் மட்ரிட்



(பார்சிலோனா)

ஸ்பானிஷ் லீக் கால்பந்துத் தொடரில் அத்லெடிக் பில்போ அணியுடனான போட்டியில் ரியல் மட்ரிட் அணி 3-0 என்ற கோல் கணக்கில் அபாரமாக வென்றது.

இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடி 2 கோல் அடித்த நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, நடப்பு சீசனில் இதுவரை விளையாடியுள்ள ஆட்டங்களில் தனது 50ஆவது கோல் அடித்து அசத்தினார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ரொனால்டோ, எத்தனை கோல் அடித்தது என்பதைவிட அணி வெற்றி பெற வேண்டும் என்பது எனது முதல் இலக்கு. இதற்கமைய இந்தப்போட்டியில் வெற்றி பெற்றமை மகிழ்ச்சி. தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்டு வெற்றிக்கு எனது பங்களிப்பை வழங்குவேன் என்றார்.

# மோசமான ஆரம்பத்தால் தோல்வி

(சென்னை)

துடுப்பாட்டத்தில் மோசமான ஆரம்பமே புனே வாரியர்ஸ் அணியிடம் தோல்வியடைய முக்கிய காரணம் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்திலேயே ஓட்டங்களை விட்டுக் கொடுத்து விட்டோம். துடுப்பாட்டத்தில் எங்களது ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. முதல் 7 ஓவரில் எங்களால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. கடைசி நேரத்தில் அடித்து விளையாடுவது சவாலாகவே இருந்தது. எங்களது துடுப்பாட்டம் மோசமாக இருந்தது. இந்தத் தோல்வி மூலம் சில துறைகளில் முன்னேற்றம் தேவை என்பது தெரிய வந்திருக்கின்றது. உடனடியாக இதனைச் சரிசெய்யும் வகையில் எமது வியூகம் அமையும். அடுத்து வரும் போட்டிகளில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாதவாறு மீள் ஒழுங்கமைப்பு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, வெற்றி குறித்து புனே வாரியர்ஸ் கப்டன் ரோஸ் டெய்லர் குறிப்பிடுகையில், எங்களது துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. ஆரோக் பிஞ்ச்-உத்தப்பா சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்தினர். பின்னர் ஸ்டீவ் ஸ்மித் அதிரடியாக விளையாடினார். புவனேஸ்வர்குமாரின் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. களத்தடுப்பும் சிறப்பாக அமைந்தது. இனி வரும் போட்டிகளில் இது மாதிரி சிறப்பாக விளையாடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.



## இன்றைய ஆட்டம்

Season 6

IPL

புனே வாரியர்ஸ் எதிர்
சன் ரைசர்ஸ்
இடம்: புனே
மாலை 4.00 மணி

ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்
மும்பை இந்தியன்ஸ்
இடம்: ஜெய்ப்பூர்
மாலை 8.00 மணி

# பரபரப்பான ஆட்டத்தில் பஞ்சாப் த்ரில் வெற்றி

(மொகாலி)

கோல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிரான பரபரப்பான ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நான்கு ஓட்டங்களால் த்ரில் வெற்றிபெற்றது. ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இருபதாவது ஆட்டம் நேற்று மொகாலியில் இடம்பெற்றது.

இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, ஆரம்பம் முதலே ஒரு சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய மண்டிப்சிங் ஒரு முனையில் தனது அதிரடியான ஓட்டத்தின் மூலம் ஓட்டங்களைக் குவித்ததுடன், அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகுத்தார். இவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி மேலும் நெருக்கடியை எதிர்கொண்டது. குறிப்பாக, 15ஆவது ஓவரை வீசிய சுனின் நரைன் ஹட்ரிக் சாதனை புரிந்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு மேலும் அதிர்ச்சி அளித்தார். 15ஆவது ஓவரின் கடைசி மூன்று பந்துகளில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைச் சாய்த்த சுனில் நரைன், ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட்டில் முதல் ஹட்ரிக் சாதனை புரிந்த வீரர் என்ற சிறப்பையும் பெற்றார். இதன் பின் களமிறங்கிய மென்பிறீட் கொனி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் சகல பந்து வீச்சாளர்களையும் புரட்டியெடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் சடுதியாக உணர்த்தினார். இதன் மூலம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்டது. இறுதியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கொனி 18 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 42, மண்டிப்சிங் 41, டேவிட் மில்லர் 20 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன், கலிஸ் தலா மூன்று, சேனாநாயக்க இரண்டு விக்கெட்டுக்களை சாய்த்தனர்.

பதிலுக்கு 158 ஓட்டங்களைப் பெற்றால் வெறறி என்ற நிலையில் களமிறங்கிய கொல்த்தா அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. முதலிரு ஓவர்க்ளில் இரண்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அடுத்தடுத்து இரு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்த தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக கம்பீருடன் இணைந்த இயன் மோர்கன் அணியின் நிலையை உணர்ந்து ஒருபுறம் பொறுப்புடன் செயற்பட்டார். மறுபுறம் ஆக்ரோஷமாகவும், அதிரடியாகவும் ஆடிய கப்டன் கம்பீர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி பந்து வீச்சாளர்களைப் பதம் பார்த்து ஓட்டங்களை வாரிக் குவித்தார். இந்த ஜோடியைப் பிரிக்க கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி கப்டன் அடம் கில்கிறிட்ஸ் பல வழி களில் வியூகம் வகுத்து செயற்பட்டார். அவரின் வியூகத்தில் சிக்காத இந்த ஜோடியின் ஆட்டம் கொத்கத்தா அணியின் நெருக்கடி தணித்ததுடன் வெற்றிக்கான வழியும் இலகுபடுத்தப்பட்டது. ஒரு வழியாக 105 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி (கம்பீர்) மென்பிறீட் கொனியால் பிரிக்கப்பட்டது. இதற்கு அடுத்த ஓவரில் அதிரடியில் அசத்தில் மற்றொரு வீரரான மோர்கனின் விக்கெட்டும் சாய்க்கப்பட ஆட்டத்தில் பரபரப்பு அதிகரித்து. திருப்புமுனையாக அமைந்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் முனைப்பில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி செயற்பட்டது. யார் பக்கம் வெற்றி எனக் கணிக்க முடியாத இந்நிலையில் கொல்கத்தா அணியின் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டது. இறுதி 12 பந்துகளில் வெற்றிக்கு 30 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் கொல்கத்தா அணி தத்தளித்தது. 19ஆவது ஓவரில் அசத்திய யூசுப் பதான், பாலாஜி ஜோடி 19 ஓட்டங்களைப் பெற்றது. அத்துடன் இந்த ஓவரின் கடைசிப் பந்தில் பாலாஜியின் விக்கெட்டும் சாய்கப்பட்டது. ஆறு பந்தில் 11 ஓட்டங்கள் என்ற நிலையில் அரங்கமே ஆர்ப்பரிப்பால் அதிர்ந்தது. 20 ஓவரின் முதல் பந்தில் பைஸ் முறையில் இரண்டு ஓட்டங்கள் பெறப்பட்டபோதும் இரண்டாவது பந்தில் அபாய வீரர் யூசுப் பதான் ஆட்டமிழந்து அணிக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தினார். தொடர்ந்து களமிறங்கிய சேனாநாயக்க இரண்டு பந்தில் ஒரு ஓட்டத்தைப் பெற்று ஆட்டமிழந்தார். இறுதியில் கொத்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கப்டன் கம்பீர் 60, இயன் மோர்கன் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அசார் மொகமட் மூன்று, பிரவீன் குமார் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.





தெல்லிப்பளை யூனியன் கல்லூரி



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி

# வலய மட்ட வலைப்பந்து யூனியன் கல்லூரி சம்பியன்

(தெல்லிப்பளை)

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப் பற்றிக் கொண்டது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக் கிடையிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த 11, 12ஆம் திகதிகளில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும்,சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி யும் மோதின. வடமாகாணத்தில் வலைப்பந்தில்வெற்றி கொள்ளப்பட முடியாத அணியாக வலம் வரும் தெல் லிப்பளை யூனியன் கல்லூரி அணி இலகுவாக வெற்றி பெறும் என்ற கணிப்பு முன்கூட்டி இரசிகர்கள் மத்தியில் இருந்தது.இதற்கமைய தெல்லிப்பளை யூனியன் கல்லுரி வீராங்கனைகளின் ஆட்டத்திறனுக்கு ஈடுகொடுக்கமுடி யாமல் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி திண்டா டியதை அவதானிக்க முடிந்தது. முற்பாதி ஆட்டத்தில் 15-9 என்ற புள்ளிகள் கணக்கில் தெல்லிப்பளை யூனி யன் கல்லூரி அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய யூனியன் கல்லூரி அணி இறுதியில் 22-12 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்று வலய மட்ட சம் பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டி யில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும், சுன்னா கம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவைஅல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது திறனை வெளிப்படுத்தின. பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டி யில் 25-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுழி- புரம் விக்ரோறியாக் கல்லூரி அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் வலய கல்விஅலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள், விளை யாட்டுக்கான பொறுப்பாசிரியர்கள்,பயிற்றுவிப்பாளர்கள், மாணவ, மாணவிகள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித் தமை குறிப்பிடத்தக்கது. (92)

# இராஜராம் சிறப்புப் பந்து வீச்சு வென்றது யங்ஸ்ரார்

(சுன்னாகம்)

இராஜராமின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் யூனியன்ஸ் அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் யங்ஸ்ரார் அணி ஐந்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி அணிகள் பல பங்குகொள்கின்றன.

விலகல் முறையில் இடம்பெற்று வரும் இக்கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடை பெற்றது.இதில் தெல்லிப்பளை யூனியன்ஸ் அணியும் யங்ஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யூனியன்ஸ் அணி, இராஜராமின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக் கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு புறம் விக்கெட்டுக்கள் சாய்க் கப்பட்டபோதும் மறுமுனையில் அதிரடியாக ஆடிய சதீஸ்கண்ணா அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் யூனியன்ஸ் அணி 26.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. இதில்

சதீஸ்கண்ணா ஐந்து பவுண்டரிகள், நான்கு சிக்ஸர்கள் அடங்கலாக 54, பிரசாந்தன் 27, ஜனுசன் 20, தயாளன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆர். இராஜராம் 25 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, சஜன், நவலக்ஷன் ஆகி- யோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யங்ஸ்ரார் அணி சுஜன், சஜன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலகுவான வெற்றிபெற்றது. இறுதியில் யங்ஸ்ரார் அணி 26 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுஜன் 47, சஜன் 42, நவலக்ஷன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிலோஜன் மூன்று, ஜான்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைச் சாய்த்தனர்.(எஸ்.பி.)

# வலய மட்ட கால்பந்து முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகள் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது.


இதில் 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி முதலிடத்தைப்பெற்றதுடன்,இரண் டாம், மூன்றாமிடங்களை முறையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் பெற்றுக் கொண்டன.

19 வயதுப் பிரிவினருக்கான ஆட் டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலிடத்தையும், இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே சென். ஜோண்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ்கல் லூரி அணி ஆகியன பெற்றுக் கொண் டன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்ட பாடசாலை அணி கள் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளதாக யாழ். வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்







புதுவருடத்தை முன்னிட்டு முல்லைத்தீவு - மல்லாவியில் பாரம்ப ரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. மல்லாவி பொலிஸ் பிரிவினர் மற்றும் பாண்டியன்குளம், துணுக்காய் பொதுமக்கள் இணைந்து நடத்திய இப்போட்டி நிகழ்வில் ஏராளமான போட்டியாளர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இப்போட்டி நிகழ்வில் ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் போன்ற விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் கிறிஸ் மரம் ஏற போட்டியாளர்கள் முற்படுவதையும், சைக்கிள் ஓட்டப் போட்டி ஆரம்பிக்கப்படுவதையும், முட்டி உடைக்க போட்டியாளர் ஒருவர் முயல்வதையும் காணலாம். (140)

# மாநில அரசின் வெளியுறவு கொள்கையின் பின்னணி

“இலங்கையை, இந்தியா, நட்பு நாடாக கருதக் கூடாது. இலங்கைக்கு எதிராக, பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். தனி ஈழத்துக்காக, பொது வாக்கெடுப்பு நடத்தும்படி, ஐக்கியநாடுகள் சபையை இந்திய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்” என 28.03.2013 இல் தமிழக சட்டசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக தமிழ்நாடு மாநில அரசாங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவது இது முதற்தடவையல்ல. இதற்கு முன்னர் 2002 - 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் புலிகளைப்பற்றி மிகவும் காட்டசாட்டமாக மேடைகளில் பேசித்திரிந்தார். அப்போது “படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் இலங்கை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என தமிழகசட்டசபை தீர்மானமொன்று நிறைவேற்றியது. அதன் பின்னர் 2011ஆம் ஆண்டில், ராஜீவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்கு தண்டனையை இரத்து செய்யக் கோரி தமிழக சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றினார்.


ஜெயலலிதா தலைமையிலான அரசினால் கொண்டு வரப்பட்ட மேற்குறித்த தீர்மானங்கள் அனைத்துமே அந்தந்தக் காலத்து அரசியலை பின்புலமாகக் கொண்டவை. ராஜீவ்காந்தி கொலையைத் தொடர்ந்து, புலிகளால் தனது உயிருக்கும் ஆபத்து விளையலாம் எனும் காலகட்டத்தில் விசேட கொமாண்டோப் படைகளின் பாதுகாப்பில் புலிகளை எதிர்த்தும், புலிகளின் அழிவிற்கு பின்னர் கருணாநிதி ரெசோ மகாநாட்டைக் கூட்டியதால், தானும் இலங்கைத் தமிழர் நலன்களுக்காக போராடுபவர் போன்றும் தோற்றம் காட்டுகிறார். அடுத்த வருடம் (2014) தமிழ் நாட்டில் நடைபெறவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலை மனதிற் கொண்டே, தற்போதைய இலங்கை அரசு, தமிழகக் கட்சிகளால் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் 28 மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, அதன் சட்டசபையில் இலங்கை போன்ற இன்னொரு நாட்டிற்கெதிராக நிறைவேற்றும் தீர்மானத்தால் எந்தவித பிரயோசனம் இல்லையென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. எனினும் இவ்வாறு இன்னொரு நாட்டிற்கெதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றுவதின் ஊடாக, மாநில சுயாட்சி அதிகாரங்களை ஜெயலலிதா அரசு துஷ்பிரயோகம் செய்கின்றதென இந்திய மத்திய அரசிடமிருந்து இதுவரையில் குரல் எதுவும் வரவில்லை. இதனால் இந்திய மத்திய அரசும் மாநில அரசின் வரம்பு மீறிய இத்தீர்மானத்தின் பின்னணியில் உள்ளது அல்லது இதனை வரவேற்கின்றது என்ற ஐயப்பாடு எழுகின்றது.

1967ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மாநில அரசைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த இந்திய காங்கிரஸ் கட்சியை வீழ்த்து வதற்கு, திராவிடர் கழகம் தனித் தமிழ்நாடு என்ற கோஷத்தை முன்வைத்திருந்தது. பின்னர் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்த சி.என். அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தவுடன் தனித்தமிழ் நாடு என்ற கோஷத்தைக் காற்றில் பறக்கவிட்டார். இவ்வாறே இன்று இலங்கைத் தமிழர்களுக்கு தனிஈழம் வேண்டும் என்று கூறும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் அத்தனைக் காற்றில் பறக்க விட்டு நாளை இன்னொன்றை சொன்னால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுக்கொண்டிருக்கும் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தக்காட்சிகள், கருணாநிதி கூட்டிய ரெசோ மகாநாடு, ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானங்களின் எதிரொலிகள், தழிழ்நாட்டில் இலங்கைச் சிங்களவர்களுக்கு எதிராக எழுந்துள்ள தமிழ் இனவாதம், இந்திய மத்திய கூட்டு அரசிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறியது, தமிழ்நாடு கல்லூரி மாணவர்களின் போராட்டம் என கடந்த ஓரிரு வருட காலத்தில் அடுத்தடுத்ததாக வரும் செய்திகள் எம்முள் பல கேள்விகளை எழுப்புகின்றன. குறிப்பாக 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், இலங்கை அமைதிப் பெருமூச்சு விடுவதைத் தடுக்கும் நோக்கில், இந்துசமுத்திர பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளிடையே ஓர் இணக்கப்பாடு தோன்றியிருப்பதாகவே தெரிகின்றது.

இலங்கை இந்துசமுத்திர பிராந்தியத்தில் ஒரு சிறிய தீவு. 1948ஆம் ஆண்டு பிரிட்டிஷிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் உள்நாட்டு சமூக, அரசியல் பொருளாதார நிலைவரங்களில் இன்னமும் ஒரு நிலையான ஸ்திரத்தன்மை தோன்றவில்லை. உலக வங்கியிடமும், அந்நிய நாடுகளின் கடனுதவியிலும் தங்கியிருக்கும் இலங்கைக்கு, தன்னிறைவு கொண்ட நாடாக உருவாக வேண்டும் என்ற இலட்சிய வேட்கையும் உள்ளது. ஆனால் உள்நாட்டில் நிலவும் இனமுரண்பாடுகளுக்கு சரியான தீர்வொன்றினைக் காண முடியாமல் திணறி வருகின்றது. இவ்வாறான சூழ்நிலையில், இலங்கைக்கு அந்நிய சக்திகள் அடிமேல் அடியடித்தால், இலங்கை மக்கள் அனைவரும் கிளர்ந்தெழுவது தவிர்க்க முடியாததாகிப் போகும்.



(நன்றி: வானவில் 27 இதழ்)

# பிழையின்றித் தமிழ் 13

– ஞானச்செல்வன் –

**நாள்களா? நாட்களா?**

நாள் + காட்டி = நாட்காட்டி, நாள் + குறிப்பேடு = நாட்குறிப்பேடு. இவை சரியானவை. ஆனால் நாள் + கள் = நாட்கள் - பிழையுடையது. கள் என்பது இங்கே ப்ன்மை விகுதி மட்டுமே. சொல்லோடு சொல் சேர்ந்தால் புணர்ச்சி விதி வேண்டும். ஒரு சொல்லோடு “கள்” என்பது சேரும்போது புணர்ச்சி விதி பொருந்தாது. “கள்” என்பது பெயர்ச் சொல்லாயின் மயக்கம் தரும் ஒரு குடிவகைப் பெயர் என அறிவோம். “கள்” பழந்தமிழ்ப் பொருள். நாட்கள் எனில் நாள்பட்ட கள் - மிகப் பழைய கள் என்று பொருளாம். நாள் பட்ட கள் “சுர்” என்று கடுப்புமிக்கதாய் இருக்கும் என்பர் பட்டறிவுடையோர். ஆகவே நமக்கெதற்கு நாட்கள்? நாள்கள் என்று இயல்பாக எழுதுவோமே?

**பவழமா? பவளமா?**

தமிழில் “ழ” கரம் தனிச்சிறப்புடைய ஒலி. அதனால் இதற்குச் சிறப்பு ழகரம் என்று பெயர். தமிழைத் தவிர, வேறு எந்த மொழியிலும் இவ்வெழுத்தை ஒலி மாறாமல் உச்சரிக்க முடியாது. தமிழர் எவரும் ழகரத்தைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது என்று முன்னரே நாம் வலியுறுத்தியுள்ளோம். சரி... அதற்கென்ன இப்போது?

பவழம் என்றாலும் பவளம் என்றாலும் பொருள் ஒன்றே. பவழம் என்று உச்சரிக்கத் தெரியாதவர்கள் - உச்சரிக்க முடியாதவர்கள் பவளம் என்று பிழையாக ஒலிக்கிறார்கள் என்று ழகரப் பற்றுக் காரணமாக உரைப்பார் உளர். அவர்களின் கருத்துப் பிழையானது. தமிழில் எந்த அகரமுதலியை (அகராதியை) எடுத்துப் பார்த்தாலும் பவழம் - பவளம் என்றுதான் போட்டிருக்கிறார்கள். பவளம் - பவழம் என்று எழுதியிருப்பதோடு ஒன்பான் மணிகளுள் (நவரத்தினங்களுள்) ஒன்று என்றும் எழுதியிருக்கிறார்கள். “மணிமிடைப் பவளம்”, “பவளக் கூர்வாய் செங்கால் நாராய்” போன்ற பழந்தமிழ்த் தொடர்களைச் சான்றாகக் கொள்க. “பவழத்தன்ன மேனி” எனும் தொடரும் பழந்தமிழில் உண்டு. ஆதலின் பவழம், பவளம் இரண்டும் ஒன்றே.

ஆதலின் எழுபத்தைந்தாம் அகவை நிறைவு கொண்டாடுபவர்கள் பவள விழா அழைப்பிதழ் என்று அச்சடித்திருந்தால், அவர்கள் மீது சீற்றம் கொள்ள வேண்டாம். தமிழ் அறியாதவர்கள் என்று வெற்றுரையும் வீச வேண்டாம்.

**இழிவு - இளிவு இரண்டும் ஒன்றா?**

இழிவு என்பதில் சிறப்பு ழகரம். இளிவு என்பதில் பொது ளகரம். திருக்குறள் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களில் இரு சொற்களையும் காணலாம். தமிழில் ஆழமாக எதுவும் அறியாமல், ழ மீது கொண்ட மிகையார்வம் காரணமாக, இளிவை இழிவு என்று திருக்குறளிலும் மாற்றிவிட்டார்கள் என்று திருக்குறள் பதிப்பாசிரியர்கள் மீது, ஏன்... திருவள்ளுவர் மீதே குற்றம் சாட்டுகிறவர் உண்டு.

இரு சொற்களுக்கும் பொதுவான பொருள் ஒன்று உண்டு. அது தாழ்வு அல்லது கீழான எனும் பொருளாகும். ஆனால் இரு சொற்களுக்குமிடையே நுட்பமான பொருள் வேறுபாடு உண்டு. இழிதல் என்றால் இறங்குதல். மலையிலிருந்து அருவி கீழே இறங்கினால், “இழி தரும் அருவி” என்றனர். தலையின் இழிந்த மயிரனையர் என்றார் திருவள்ளுவர். தலையிலிருந்து கீழே



இறங்கிய (கொட்டிய) மயிர் என்பது உவமை. அதற்கு என்ன மரியாதை உண்டு? அதுபோலவே தம் நிலையிலிருந்து கீழே இறங்கியவரும் (தாழ்ந்தவரும்) [illegible]ார் என்பது பொருள்.

ஆனால் இளிவு வேறு. எண் சுவையுடன் சாந்தம் என்று ஒன்று கூட்டி நவரசம் என்பர் வட நூலார். தொல்காப்பியம் உரைக்கும் மெய்ப்பாடுகள் எட்டுள் இளிவரல் என்பதும் ஒன்று.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை” என்று அந்த நூற்பா தொடங்குகிறது. இந்த இளிவரல்தான் இளிவு. இதன்பொருள் அருவருப்பு. திருக்குறளில், “இளிவரின் வாழாத மானமுடையார் ஒளிதொழு தேத்து முலகு” என்றும் குறட்பா மானம் அதிகாரத்துள் உள்ளது. மானக்கேடு நேர்ந்தால் வாழாதவர்கள் மானம் உடையவர்கள். இளிவு என்பது மானக்கேடு (அவமானம்) என்ற பொருளில் வந்தமை காண்க. நிலையிலிருந்து தாழ்ந்தாலும் (இழிவு), இளிவு எனும் மானக்கேடும் நுட்பான பொருள் வேறுபாடு கொண்டுள்ளமை அறிக. இழிவினும் கீழான அருவருப்பாவது இளிவு.

திருக்குறளில் வரும் இளிவு எனும் சொல்லை எடுத்துவிட்டு, இழிவு என்னும் சொல்லைச் சேர்த்திட நாம் யார்? நமக்கு என்ன உரிமை இருக்கிறது? திருக்குறளில் கைவைக்கும் அளவுக்கு நாம் பேரறிவாளரா? என்று சிந்திக்க வேண்டும்.

# அழகு வேண்டுமா?

**வர்த்தகைப் பழம்:** இதில் விற்றமின் "ஏ", "பி", "சி" நிறைந்த அளவில் இருக்கிறது. சருமம் பொலிவு இழப்பதை அகற்றும்.

**பால்:** சருமத்தை சுத்தம் செய்து புதிய கலங்கள் வேகமாக உருவாக உதவும்.

**மஞ்சள்:** மஞ்சளில் மருத்துவப் பண்புகள் நிறைய உண்டு. சருமக் குறைகளை நீக்கி, சருமத்திற்கு மினுமினுப்பைக் கொடுக்கும்.

**தக்காளி:** இறந்த கலங்களை அகற்றி மேனியை பளபளப்பாக்கும்.

**கோதுமை மா:** இரும்புச்சத்து நிறைந்த கடலை மா போலவே பயன்படும். உடலின் அழுக்குகளை அகற்ற உதவும்.

**பாதாம்:** எண்ணெய் நிறைந்த பாதாம் ஈரப்பதத்தை சருமத்துக்கு மீட்டுத் தரும்.

**வெள்ளரி:** உடலுக்கு குளிர்ச்சி அளிக்கும். உலர்ந்த சருமத்தை இதமாக்கும். வெள்ளரிக் கூழை பூசிக் கழுவி வர முகம் பளிச்சிடும். கண்களுக்கு சுற்றியுள்ள கருவளையங்கள் மறைய கண் மேல் வைக்கலாம்.

**பப்பாசி:** சருமக் கலங்களைப் புதுப்பிக்க, கருமையை குறைக்க உதவும்.

**மாம்பழம்:** மேனி முதுமை அடைவதைத் தடுக்கும்.

**தேன்:** சருமத்தை பொலிவாக்குகிறது.

**வாழைப்பழம்:** இரும்புச்சத்து, பொட்டாசியம், சோடியம் போன்ற ஏராளமான ஊட்டப் பொருள்கள் உள்ளன. வாழைப்பழத்தை சருமத்தில் பூசி வர சருமம், மென்மை அடைந்து இளமையும், ஆரோக்கியமும் பெறும்.

**எலுமிச்சை:** நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் எலுமிச்சைக்கு உண்டு. பொடுகுத் தொல்லைக்குத் தீர்வாகும். சருமத்தை இறுக்கம் அடையச் செய்யும்.

# வாஸ்கோட காமா இல்லை!

மேற்கத்திய நாட்டுக்காரர்களுக்கு, நம் ஆசியாக் கண்டத்தைப் பற்றி எப்போதுமே ஒரு தாழ்வான அபிப்பிராயம் உண்டு. 15ஆம் நூற்றாண்டில் கோழிக்கோட்டில் (கேரளா) கப்பலில் வந்து வாஸ்கோட காமா இறங்கியதன் மூலம் தான் ஆசியாவே, கண்டுபிடிக்கப்பட்டது! இல்லாவிட்டால் ஆசியா ஒரு இருண்ட கண்டமாகவே இருந்திருக்கும் என்றெல்லாம் வெளிநாடுகளில் ஒரு கருத்து உண்டு.

இதையெல்லாம் மறுக்கும் விதத்தில், ஆதாரபூர்வமான ஒரு புத்தகம் வந்திருக்கிறது. "வாஸ்கோட காமாவின் கதை!" என்ற இந்தப் புத்தகத்தை எழுதியவர் சஞ்சய் சுப்ரமணியம் என்பவர். விலை என்ன தெரியுமா? 1500 இந்திய ரூபா!

புத்தகத்தில் சஞ்சய் சுப்ரமணியம் சொல்லியிருக்கும் கருத்துகள் சுவாரசியமானவை... வாஸ்கோட காமா கோழிக்கோட்டுக்கு வந்து சேர்ந்தது அவருடைய திறமையால் அல்ல; அவருடைய கப்பலில் மாலுமி யாக இருந்த ஒரு குஜராத் இந்தியரால் தான். போர்ச்சுக்கலில் இருந்து இந்தியாவுக்கு வாஸ்கோட காமா வந்து சேர வழிகாட்டியாக இருந்தவர் அந்த இந்தியர். ஆக, ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு கடல் வழியைக் கண்டுபிடித்தது ஒரு ஐரோப்பியர் அல்ல. நாம், நம்முடைய வரலாற்றைச் சரி யானபடி எழுதி வைப்பதில்லை என்பது தான் நம்முடைய குறை என்று அப்புத்தகத்தில் கூறுகிறார் சஞ்சய் சுப்ரமணியம்.



# அமெரிக்கர்களுக்குப் பிடித்தது?

அமெரிக்காவைச் சேர்ந்த கலூப் என்ற நிறுவனம், "அமெரிக்கர்களுக்கு மிகவும் பிடித்த நாடு எது?" என்ற ஆய்வை நடத்தியது. இதில், முதலிடம் பிடித்திருப்பது, கனடா. 92 சதவீதம் பேர், கனடாவைத் தங்களுக்குப் பிடித்திருப்பதாக கூறியுள்ளனர்.

அமெரிக்கர்களின் விருப்பப் பட்டியலில், பிரிட்டனுக்கு இரண்டாவது இடமும், ஜெர்மனிக்கு மூன்றாவது இடமும் கிடைத்துள்ளன. இந்தியாவுக்கு, ஆறாவது இடம் கிடைத்துள்ளது. 68 சதவீதம் அமெரிக்கர்கள், இந்தியாவை விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான, இஸ்ரேலுக்கு, இந்தப் பட்டியலில் இந்தியாவுக்கு அடுத்ததாக, ஏழாவது இடம் தான் கிடைத்துள்ளது என்பது, ஆச்சரியமான விஷயம் தான். அதே நேரத்தில், அமெரிக்கர்கள், மிகவும் வெறுக்கும் நாடுகளில், பாகிஸ்தானுக்கு, மூன்றாவது இடம் கிடைத்துள்ளது. வெறுப்பில், முதலிடத்தை பிடித்துள்ளது, ஈரான். இரண்டாவது இடம், வட கொரியாவுக்கு கிடைத்துள்ளது.

# நெஞ்சிலிருந்து பாயும் குண்டுகள்!

ஹொலிவுட்டில், வித்தியாசமான வேடங்களில் நடித்து ரசிகர்களின் வரவேற்பை பெற்றவர் சோபியா வெர்கரா. இவர் தற்போது, "மாச்செட் கில்ஸ்" என்ற படத்தில், சாகச வேடத்தில் நடித்து வருகிறார். இந்தப் படம், விரைவில் வெளியாகவுள்ளது.

இந்த படத்தின் போஸ்டர், சமீபத்தில் வெளியானது. அதில், தன் மேலாடைக்கு மேல் துப்பாக்கி வடிவ "பிரா"வை சோபியா அணிந்திருப்பது போன்ற காட்சி இடம் பெற்றுள்ளது. இந்த உடை, தற்போது ஹொலிவுட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சோபியா அணிந்திருக்கும் மார்புக்கச்சையின் இரு முனைகளும், துப்பாக்கி போல் இயங்குகின்றன. அதிலிருந்து, குண்டுகள் சரமாரியாக சீறிப் பாய்வதைப் போல், அந்த போஸ்டரில், காட்சி இடம் பெற்றுள்ளது. படம் வெளியானதும், இந்த துப்பாக்கி விவகாரம், வேறும் பல சர்ச்சைகளை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காற்றைக் கறந்து "எரு" படைத்த மேதையர்

**- வ. கோபு -**

பிரிட்ஸ் ஹாபர், கார்ல் பொஷ் (Fritz Haber and Carl Bosch) என்ற இரு ஜெர்மானிய விஞ்ஞானிகள், முதல் உலகப் போரில், தங்கள் நாட்டுப்படைக்கு குளோரின் விஷ வாயு ஆயுதங்களைத் தயாரித்தனர். ஹாபரின் முதல் மனைவி தற்கொலை செய்து கொண்டாள். பல்வேறு புதுப்புது வெடிகளையும் இவ்விருவர் படைத்தனர். இரண்டாம் உலகப்போரில், அடோல்ப் ஹிட்லரின் கட்டளையில், நிலக்கரியிலிருந்து லொறிகளுக்கும், டாங்கிகளுக்கும், விமானங்களுக்கும் பெட்ரோலையும் தயாரிக்க புதுமுறைகளைக் கண்டுபிடித்தனர்.

இவ்விருவரைப் பற்றிச் சென்ற ஆண்டு வரை நான் கேள்விப்பட்டதே இல்லை.

இவ் இருவரும் என் மதிப்பிற்கும் நன்றிக்கும் வணக்கத்திற்கும் உரியவராக கருதி, இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

ஏன்?

1900 ஆம் ஆண்டில் உலகின் சனத்தொகை 200 கோடி. நிகழும் 2013 ஆம் ஆண்டில் 700 கோடி. இந்த அதிசய இனப்பெருக்கம் எப்படிச் சாத்தியம்? உணவு பற்றாக்குறையால் பஞ்சம் வந்து ஏன் கோடிகள் சாகவில்லை?. கடந்த இருநூறு ஆண்டுகளின் பஞ்சங்கள் யாவும் போர்களினாலோ, விநியோகத் தடைகளாலோ, நிர்வாகக் குறைகளாலோ உண்டானவை; உணவு பற்றாக்குறையால் அல்ல.

மனிதகுலத்தின் உணவுகளில் எடையால் எண்பது சதவிகிதம் பன்னிரெண்டே செடி இனங்கள் மூலமாகும். இவை - அரிசி, கோதுமை, சோளம், பார்ளி, சோர்கம், சோயா, மானியோக், உருளைக்கிழங்கு, சக்கரைவள்ளிக் கிழங்கு, கரும்பு, சுகர்பீட், வாழை ஆகியவை. மானியோக் ஒரு ஆபிரிக்கக் கிழங்கு. தகுந்த மண்ணும், தருணத்தில் நீரும், தரமான உரமும் இப்பயிர்கட்குத் தேவை. உரத்தில் முக்கியம் நைதரசன். காற்று மண்டலத்தில்



80% நைதரசன் இருப்பினும், இதை இவ்வடிவில் உறிஞ்சும் திறன் செடிகளுக்கு இல்லை. மின்னல் அடித்து உருவானதோ, மண்ணில் இயற்கையாய் உள்ள நைட்ரேட் உப்புகளிலுள்ள நைதரசனோ, அல்லது சாணியிலும், அழுகும் இலைகளிலும் உள்ள நைதரசனோ, ஒரு சில பருப்புகளிலிருந்தும் கிழங்குகளிலிருந்தும் வரும் நைதரசனோ செடிகளுக்கு வேண்டும்.

இயற்கையில் கிடைக்கும் நைதரசன், விவசாய பயிரின் அளவை ஆளுகிறது. பயிர்செய்யா நிலங்களும், காடுகளும், பாலைகளும், கழனிகளாய் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மாற்றப்பட்டன. இதைத் தவிர, தென் அமெரிக்காவில், மலை மலையாய் குவிந்திருந்த வௌவால் சாணியையும், பறவை சாணியையும், ஸோல்ட்பீட்டர் என்ற உப்பையும், நூற்றுக்கணக்கான கப்பல்களில் ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் இறக்குமதி செய்தும், பயிரினங்களையும், உணவு உற்பத்தியையும் பெருக்கின. சீனத்தில் தேயிலையும், பட்டும் போல, இந்தியாவில் பங்கும், மிளகும் போல, தென்னமெரிக்காவில் சாணமும், எரு உப்பும் கப்பலேறின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவை தீர்ந்துவிட்டன. நைதரசன் நலிவினால் பஞ்சம் படையெடுக்க மிரட்டியது. காற்றுமண்டல நைதரசனை செயற்கை எருவாக மாற்ற புதுக் கருவிகளும், தொழில்நுட்பமும் ஆலைகளும் தேவையாயின. இதைத்தான் ஹாபரும் பொஷ்-உம் ஆய்ந்து படைத்தனர். அமோனியா எருவும், அதை மாபெரும் அளவில் தயாரிக்க பிரமாண்ட ஆலைகளையும், இவ்விருவர் உருவாக்கினர். இவர்கள் ஆய்ந்தளித்த தொழில்நுட்பத்திற்கு ஹாபர் பாஷ் முறை என்று பெயர்.

இதற்கு 1918 இல் ஹாபருக்கும், 1931 இல் பொஷ் இற்கும் இரசாயனத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது. முதலாம் உலகப்போரில் தம் படைகள்மேல் ஏவிய குளோரின் விஷவாயு ஆயுதங்களைப் படைத்த போர்க் குற்றத்திற்காக, ஹாபரை கைது செய்ய பிரெஞ்சு அரசு தேடியது. அவர் சுவிட்சர்லாந்தில் தஞ்சம் புகுந்தார். ஹாபருக்கு நோபல்குழு பரிசு வழங்கிய பின், பிரெஞ்சு அரசு அவரை மன்னித்து, தேடலை கைவிட்டது. பிறகு சில ஆண்டுகள், ஆங்கில பிரெஞ்சு அரசுகள் இந்த தொழில்நுட்பத்தைத் திருட பல முயற்சிகள் செய்தன. திருடும் வகை அம்முறை விஞ்ஞானிகளுக்கும் எளிமையாக இல்லை ஈடற்ற பயனுள்ளதால் அழிக்கவும் மனம் வரவில்லை. இம்முறையால் படைகளுக்கு வெடிகளும் தயாராயின. செம்புலப் பெயல்நீர் போல நன்மையும் தீமையும் கலந்தது ஹாபர்-பொஷ் முறை.

இன்று உலகின் நைதரசன் எரு யாவும் ஹாபர்-பொஷ் முறையில் தான் தயாராகின்றன. ஹாபர் பொஷ் என்றிரு மானிடர் வாழ்ந்ததும், ஆய்ந்தெடுத்த புதுமுறை மாட்சியும், ஆலையமைத்து ஞாலம் வளர்த்ததும், உணவிற்கும் வாழ்விற்கும் நன்றிக்கடன் பட்ட நானூறு கோடி மக்களில் யாவர் அறிந்தனர்? யாவர் அறிந்திலார்?

# வாழ்வு தரும் மரங்கள்

ச.திருமலைராஜன்

பத்துக் கிணறுகள் ஒரு குளத்திற்குச் சமம்
பத்துக் குளங்கள் ஒரு ஏரிக்குச் சமம்
பத்து ஏரிகள் ஒரு புத்திரனைத் தருவதற்குச் சமம்
பத்துப் புத்திரர்கள் ஒரு மரத்திற்குச் சமம்
எவர் ஒருவர் நற்கனிகள் பூத்துக் குலுங்கும்
நல்மரங்களை நடுகின்றாரோ அவரிடம்
தேவர்ளும், முனிவர்களும், தேவதைகளும், கந்தர்வர்களும்
மூன்று யுகங்களும் தங்கி அருள் புரிவர்

- சுரபாலரின் விருஷ ஆயுர்வேதம் -

சிறுவயதில் நட்டு வளர்த்த ஒரு மரத்தைத் தேடி, 22 வருடங்களுக்கு முன்பாகக் குடியிருந்த வீட்டைத் தேடிச் சென்று அது இப்பொழுது வானுயர வளர்ந்து நின்ற காட்சியைக் கண்டு சிலிர்த்து நின்ற பொழுது, நானும் கூட வாழ்வில் ஏதோ உருப்படியான ஒரு காரியம் செய்திருப்பதாகச் சற்றுப் பெருமிதம் அடைந்தேன். உனக்குத் தெரிந்த 50 மரங்களைப் பட்டியலிடு என்றால் நம்மில் பெரும்பாலோர் அதிக பட்சமாக ஒரு 20 மரங்களின் பெயர்களைச் சொல்லக் கூடும். அதில் பல மரங்களை இக்காலத் தலை முறையினர் பலரும் பார்த்திருக்கக் கூட மாட்டார்கள். இன்னும் பல மரங்களை தினமும் நாம் நடந்து செல்லும் பாதையில் கண்டிருப்போம் ஆனால் அவற்றின் பெயரைத் தெரிந்து கொள்ள முயன்றிருக்கக் கூட மாட்டோம். மரங்கள் என்று மட்டும் இல்லை, பறவைகள், பூச்சிகள், விலங்குகள், செடிகள் என்று நம் சுற்றுச் சூழலில் நாம் உறவாடும் எந்தவொரு உயிரினத்தை எடுத்துக் கொண்டாலும் நமது எல்லைகள் மிகவும் சுருங்கியவை என்பதைச் சற்று யோசித்துப் பார்த்தால் உணர்வோம்.

"எல்லா உயிரினங்களிலேயும் மிகச்சிறப்பானவை தாவரங்கள். ஆதவனின் ஒளிச்சக்தியை இரசாயன ஆற்றலுடைய உணவுப்பொருட்களாக மாற்றும் தன்மை தாவரங்களுக்குத் தான் உண்டு. மனித இனமும், மற்ற விலங்குகளும் இந்த இரசாயன ஆற்றலைப் பெறுவதற்காக நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாவரங்களைச் சார்ந்துள்ளன" என்று "தமிழரும் தாவரமும்" என்னும் நூலின் அறிமுகத்தில் நாஞ்சில் நாடன் குறிப்பிடுகிறார். அதே நூலில் "தொல்காப்பியத்தில் 52 தாவரங்களும், சங்க இலக்கியங்களில் 207 தாவரங்களும், சங்க மருவிய காலத்தில் 185 தாவரங்களும், பக்தி இலக்கிய காலத்தில் 238 தாவரங்களும்" குறிப்பிடப்பட்டுள்ளன என்கிறார்.

நம் தலைமுறையினருக்கு எல்லாம் தாவரங்களின் பெயர்கள் கூட "பூவரசம் பூ பூத்தாச்சு" என்று பொண்ணுக்குச் சொல்லும் சேதியான திரைப்படப் பாடல்கள் மூலமாகவே அறிய வருகின்றன. பூவரச இலையிலே பீப்பி செய்து ஊதினோம் என்ற சென்ற தலைமுறையினரின் சிறுபிள்ளை விளையாட்டைக் கூட இன்னொரு திரையிசைப் பாடலே அறியத் தருகிறது. ட்ரை சைக்கிள், வித் ட்ரெயினிங் வீல் எல்லாம் குழந்தைப் பருவத்து விளையாட்டுச் சாமானாகக் கிடைக்க வழியில்லாத அந்தக் காலத்தில் நொங்கு உண்ணப்பட்ட பின் எறியப்படும் பனங் காய்களே மானசீகமான சைக்கிள்களாகவும் கார்களாகவும் விளையாட்டுச் சாமான்களாகவும் புழங்கிய காலத்தில் நொங்கு என்பது பனை மரத்தில் இருந்து விளைவது என்ற விபரமாவது தெரிந்திருந்தது. கறுப்பு சிவப்பு நிறத்தில் மின்னும் அழகிய சிறு மணிகள் ப்ளாஸ்டிக் பொருள் அல்ல அவை விளைவது குன்றிமணி மரத்தில் இருந்து என்ற விபரம் விளையாட்டுப் போக்கில்தான் தெரிய வந்தது. இக்காலத்தில் கிராமப் பகுதி சிறுவர்கள் கூட காடு, மலை, நதி என அலைந்து திரிந்து விளையாடியும் அதன் மூலமாகச் சுற்றுச் சூழலை அறிந்து கொள்ளும் அனுபவத்திற்கான நேரமில்லாமலேயே டி.வி.யின் முன் வளர்கிறார்கள்.

அப்படி நம் இலக்கியங்கள் அடையாளப் படுத்திய பாடல் பெற்ற சிறப்புடைய இந்த நானூற்றி சொச்சம் மரங்களில் எத்தனை மரங்களை நாம் தற்காலத்தில் அறிவோம்? எத்தனை மரங்கள் இன்னும் உயிர்ப்புடன் வாழுகின்றன. எத்தனை அழிந்து போயின? நமக்கு ஏற்கனவே பரீட்சயமான ஒரு பத்திருபது மரங்களுக்கு அப்பால் எந்தவொரு தாவர இனத்தையும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது என்பதே உண்மை நிலைமை. அந்த அளவு குறைந்தபட்ச தேவைக்கு மட்டுமே தெரிந்து கொள்ளும் அறிவுடனேயே நாம் வளர்க்கப்படுகிறோம். நம்மை வளர்த்த பெற்றோர்களும் ஆசிரியர்களும் கூட அந்த நிலையில்த்தான் பெரும்பாலும் இருந்தார்கள். ஒரு வேளை தாவரவியல் படித்த மாணவர்களுக்குக் கூடுதலாக ஒரு பத்து மரங்கள் தெரிந்திருக்கலாம்.

இப்பொழுது சிக்குன் குனியா, டெங்கு போன்ற வினோத நோய்கள் பரவுகின்றன. அவற்றிற்கான மருந்துகள் அலோபதி துறையில் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை ஆகவே சித்த மருத்துவம் பரிந்துரைத்த மூலிகைக் கஷாயத்தையே நாங்களும் பரிந்துரைக்கிறோம் என்கிறார்கள் எம்.டி, படித்த ஆங்கில மருத்துவர்கள். நில வேம்புக் கஷாயம் குடித்தால் அந்த நோய் குணமாகிறது என்கிறார்கள். அந்த நிலவேம்புச் சூரணத்தையும் கஷாயத்தையும் தேடி மக்கள் ஓடுகிறார்கள். ஆனால் அந்த நில வேம்பு என்பது செடியா, மரமா என்பதைத் தெரிந்து கொள்வதில் எவருக்கும் ஆர்வமில்லை. நானும் வேம்பு என்றால் அது ஒரு வகை வேப்ப மரம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதை வளர்ப்பதற்காக கன்றுகளைத் தேடிச் சென்ற பொழுதுதான் ஒரு குறுஞ்செடி என்ற விபரம் தெரிய வந்தது. சில இலைகளைப் பறித்து சுவைத்தால் கடுமையான கொடும் கசப்பு நாக்கில் நீண்ட நேரம் தங்குகிறது. அது விஷ முறிவு மூலிகையும் கூட என்கிறார்கள். புற்று நோய்ச் சிகிச்சையான கீமோதெரபிக்குப் பதிலாக ஒரு வகைப் பழத்தை உண்டால் பலன் கிடைக்கிறது என்றார்கள். அதைத் தேடிய பொழுது அந்த மரத்தின் தமிழ் அல்லது வட்டாரப் பெயரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அது சீத்தாப் பழத்தின் ஒரு வகை என்பது மட்டுமே தெரிந்தது.



திரு.ஆர்.எஸ்.நாராயணன் அவர்கள் எழுதிய "வாழ்வு தரும் மரங்கள்" என்ற நூல் பயனுள்ள பல தகவல்களைத் தருகிறது. நாம் கல்லூரியில் படித்த தாவரவியல் பாட நூல்கள் போல கடினமாகவும் வறட்சியாகவும் இல்லா மல் மிகவும் சுவாரசியமான நடையில் ஒவ்வொரு மரம் குறித்தும் முழுமையான தகவல்களுடனும் ஏராளமான சுவாரசியமான உப தகவல்களுடனும் இந்த நூலை எழுதியுள்ளார். ஒவ்வொரு மரம் குறித்தும் அவற்றின் தாவரவியற் பெயர், இலக்கியங்களில் வழங்கப்பட்ட பெயர், ஆங்கிலப் பெயர் ஆகிய தகவல்களுடன் ஒவ்வொரு மரம் குறித்தான கட்டுரையையும் தொடங்குகிறார். பின்னர் அந்த மரம் குறித்தான புராணச் செய்திகள், இலக்கியக் குறிப்புகள், மரத்தின் மருத்துவப் பயன்பாடுகள், சமூகப் பயன்பாடுகள், மரம் வளரத் தேவையான இடம், மண், தட்ப வெட்ப நிலை குறித்த விபரங்கள், அந்த மரத்தினால் விளையும் சுற்றுச் சூழல் பயன்பாடுகள், வேறும் சுவாரசிய செய்திகள், அந்த மரத்தினால் ஏற்படும் சூழலியற் தாக்கங்கள், அந்த மரம் தோன்றிய நாடுகள் அல்லது இடங்கள், அந்த மரத்தினால் பயனடையும் பறவைகள், விலங்குகள் போன்ற எண்ணற்ற செய்திகளை ஒவ்வொரு கட்டுரையிலும் தருகிறார். மரத்தைப் பற்றிய சித்தர்களின் குறிப்புகளையும், இரசாயனக் குறிப்புகளையும் பண்பாட்டுக் கூறுகளுடன் இணைந்து விளக்குகிறார். ஒவ்வொரு மரம் குறித்து படித்து முடிக்கும் பொழுதும் அந்த மரம் மீது நமக்கு பிரமிப்பும் பக்தியும் பாசமும் ஏற்பட்டு விடுகின்றன. ஒவ்வொரு தாவரமும் இயற்கையின் எண்ணிலடங்காத அதிசயங்களைத் தன்னுள் கொண்டு இந்தப் பூவுலகம் உயிர்ப்புடன் இருப்பதற்கு எந்த வகையில் உதவுகிறது என்பதை ஒவ்வொரு மரத்தின் தகவல்கள் மூலமாகவும் ஆசிரியர் விளக்குகிறார். இந்த நூலைப் படித்து முடிக்கும் ஒவ்வொருவரும் உடனடியாக ஒரு மரக்கன்றையாவது நட்டு விட்டே அடுத்த வேலைக்குச் செல்வார் என்பது உறுதி. சில மரங்களின் பயன்பாடுகளைப் படிக்கும் பொழுது அதை நம் சூழல்களில் கண்டிருந்தாலும் அதன் அருமை தெரியாமல் வளர்ந்திருக்கிறோமே என்ற வெட்கமே ஏற்படுகிறது.

கீழ்க்கண்டவை போல ஏராளமான தகவல்கள் அடர்ந்த மரத்தின் இலைகள் போலச் செறிவுடன் நூல் முழுவதும் காணக் கிடைக்கின்றன.

"மரங்களில் நான் அரச மரமாக இருக்கிறேன்" என்று கிருஷ்ணன் கூறுகிறார்.

ஒரு அரச மரம் நட்டால் ஒரு ஆண்டு சொர்க்க லோக பதவி கிட்டும் என்று விருஷ ஆயுர்வேதத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறதாம்.

பல ஆண்டு கால சொர்க்கலோக வாசத்துக்கு பல அரச மரங்கள் நட வேண்டும். அதிக அளவில் ஒட்சிசன் தரும் மரமாக அரச மரம் விளங்குகிறது. பிள்ளை வரம் வேண்டுவோர் அரச மரத்தைச் சுற்றச் சொல்லியிருப்பதன் மருத்துவ காரணங்கள் உள்ளன.

அரச மரத்தின் அதிக பிராணவாயுவினால் சுவாசம் சுத்தமடைகிறது, அதனால் எண்ணம் சுத்தமடைகிறது அதனால் புத்தி தெளிவாகிறது, ஞானம் பிறக்கிறது. புத்தருக்கு ஞானம் அளித்த போதி மரம் என்பது ஒரு அரச மரமே என்றும் அதன் காரணமாகவே அரச மரத்தின் அடியில் அமர்ந்து கிராம பஞ்சாயத்துகளில் நீதி வழங்கினார்கள்.



ஆல மரம் வாக்கின் அடையாளம் என்றும் அதன் காரணமாகவே வணிகர்கள் அதன் அடியில் கூடி தங்கள் வணிகத்தை நடத்தினார்கள் என்றும் அதன் காரணமாகவே அது ஆங்கிலத்தில் "பான்யன் ட்ரீ" என்று அழைக்கப் பட்டிருக்கிறது. ஆல மரம் மேகங்களை ஈர்த்து அதிக மழையை தருவிக்கக் கூடியவை, அதன் காரணமாக ஆல மரங்கள் நிறைய வளர்க்க வேண்டியவை.

சாஸ்த்திர முறைப்படி இரண்டு ஆல மரங்களை நடுபவர்களுக்கு கைலாயத்தில் ஒரு இடமும் கூடவே கந்தர்வ கன்னியரும் கிடைப்பார்கள் என்றும் விருஷ ஆயுர்வேதம் நூல் சொல்கிறது.

ஆலம்பால் வயாகரா போலப் பயன்பட்டதே அந்த கன்னியர்கள் கிட்டும் ரகசியம்.

மேகங்களை இழுக்கும் சக்தியுள்ள இன்னொரு மரமாக இலுப்பை மரத்தையும் அது ஏன் ஆலையில்லா ஊருக்குச் சர்க்கரையானது என்பதைப் பற்றியும் கூறுகிறார்.

அரசு ஆண் மலடை நீக்கும் வல்லமை உடையதினாலும் வேம்பு பெண் மலடை நீக்கும் வன்மையுள்ளது என்பதினாலும் அரசுக்கும் வேம்புக்கும் திருமணம் செய்யும் பெர்டிலிடி ரைட்ஸ் உருவானது.

நூறு ஆண்டுகள் வாழ்வதற்கு வேப்ப மரப்பட்டையின் கஷாயம் அருந்த வேண்டும்.

நெட்டிலிங்க மரங்களே தமிழ் நாட்டில் அசோக மரங்களாக கருதப்படுகின்றன. உண்மையான அசோக மரங்கள் இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்டு தமிழ் நாட்டில் வளர்க்கப்பட வேண்டும்.

இப்படி மரங்கள் குறித்தான எண்ணற்ற செய்திகள் ஒவ்வொரு மரத்தின் மீதும் பெரும் மரியாதையையும், பிரமிப்பையும் அளிக்கின்றன. சொர்க்கம் நரகம் என்பதெல்லாம் நாம் வாழும் சூழலே என்பதையும் நம் வாரிசுகளின் நன்மைக்காகவே இந்த பூமியை நாம் விட்டுச் செல்கிறோம் என்ற உண்மையையும் அவை உணர்த்துகின்றன. மரம் வளர்ப்பதினால் சொர்க்கத்தையும் நம் வாரிசுகளை மரமில்லாத, நீரில்லாத, மாசடைந்த நரகத்தில் இருந்தும் காக்கிறோம்.

# இந்திய வீட்டுத்திட்ட வடக்கு அலுவலகம் செஞ்சிலுவைச் சங்கக் கிளையில் இயங்கும்

- செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான இந்திய வீட்டுத்திட்ட முகாமையாளர்கள் அலுவலகம் இம்மாத இறுதிக்குள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைக்காரியாலயத்தில் இயங்கும் என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கான முன்னாயத்த வேலைகள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் முன்னெடுக்கப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டதுடன், அனேகமாக எதிர்வரும் 20 ஆம் திகதியில் இருந்து இந்த அலுவலகம் செயற்பட ஆரம்பிக்கும் என்று தெரிவித்தார்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகளை இந்த அலுவலகம் முகாமை செய்யவுள்ளதுடன், இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாக எழும் பிரச்சினையை பொதுமக்கள் வந்து உடனுக்குடன் தீர்த்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (பா)

## பிற்போடப்பட்டது அபிவிருத்திக் கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் அபிவிருத்திக் கூட்டமும் ஆளுநர் சபைக்கூட்டமும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக கிளையின் தலைவர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்தார்.

ஏற்கனவே இவ் இரு கூட்டங்களும் கடந்த 13 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது, இந்த தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்தக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பிற்போடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## சேதமடைந்த குளத்தின் கலிங்கு; சிரமத்தில் போக்குவரத்து

(மல்லாவி)

மல்லாவிப் பிரதேசத்தில் ஸ்கந்தபுரம் கோணாவில் வீதியிலிருந்து அக்கராயன்குளத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள குளத்தின் கலிங்கு நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுவதால் அப்பகுதியூடான போக்குவரத்து சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்குளக் கலிங்கு மணல் பகுதியாகவே காணப்படுவதால் மழைகாலங்களில் குளத்து நீர் நிரம்பி உடைப்பெடுத்தால் இக்கலிங்கு சேதமடையும் அபாயம் காணப்படுவதாகவும், போக்குவரத்து தடைப்படும் நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. இப்பாதையினை இப்பிரதேசத்திலுள்ள உள்ளூர் கிராம மக்கள் அதிகளவில் பயன்படுத்தி வரும் நிலையில் இப்பாதை உரியவகையில் புனரமைக்கப்படவேண்டும் எனவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# நீண்டகாலமாக புனரமைக்கப்படாத தம்பாலை இந்து மயான வீதி

(யாழ்ப்பாணம்)

சநநிதி வீதி தம்பாலையில் அமைநதுள்ள இந்து மயான வீதியானது நீண்ட நாட்களாகப் புனரமைப்பின்றிப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதாவது இந்த வீதியானது குண்டும் குழியுமான நிலையிலும் வீதியின் இரு மருங்கும் புதர்களும் காணப்படுவதுடன், பாறைக் கற்களும் சிறு கற்களும் ஆங்காங்கே காணப்படுவதால் உடலைத் தகனம் செய்வதற்கு கொண்டு செல்லும் மக்களும் இந்த வீதியூடாக தமது விவசாய நடவடிக்கைக்காகச் செல்லும் விவசாயிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த மயானத்தில் உடலைத் தகனம் செய்வதற்கான வசதிகள் திருப்திகரமானதாக இல்லை எனக் கூறும் பொதுமக்கள் தகனக் கிரியைகள் மேற்கொள்ளச் செய்யும் வேளைகளில் இளைப்பாறுவதற்கும், தமது கடமைகளைச் செய்வதற்குமான கட்டட வசதிகள் எவையும் இல்லை எனவும், மழை, வெயில் என்று சிரமத்தின் மத்தியிலே கிரியைகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

தமக்கான இந்தப் புனரமைப்புப் பணிகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு தமது சீரான போக்குவரத்துக்கும், இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்குமான வழிகளைச் செய்து தருமாறு மக்கள் கோரி நிற்கின்றனர்.

# காரைநகர் மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர்வழங்கல்

(யாழ். நிருபர்)

இலண்டனில் புலம்பெயர்ந்து வாழும் காரைநகர் மக்களின் அனுசரணையுடன் பிரித்தானியா காரைநகர் நலன்புரிச் சங்கம் காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஊடாக பவுசர் மூலம் காரைநகர் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கி வருகிறது.

சுன்னாகத்தில் இருந்து பவுசர் மூலம் எடுத்துவரப்படும் குடிதண்ணீர் காரைநகரில் தண்ணீர்ப் பற்றாக்குறையாக உள்ள பல்வேறு பிரதேசங்களுக்கும் கிரமமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மிகவும் மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் வியாவில், பலுகாடு போன்ற பிரதேசங்களுக்கு கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக குடிதண்ணீர் விநியோகம் நடைபெறவில்லை என இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரிடம் முறையிட்டுள்ளதாகவும் அவர்க்ள குறிப்பிட்டனர். (10)



யாழ். செயலகத்தில் செயலக ஊழியர்களுக்கு கைவிசேஷம் வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் செயலக உத்தியோகத்தர் ஒருவருக்கு கைவிசேஷம் வழங்குவதனையும், அதன் பின்னர் அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அரச ஊழியர்களையும் காணலாம். (பா)

# ஆயுர்வேதம்



## சோம்பேறித்தனம் அகல..!

எந்த வேலைக்கும் போகாமல் சோம்பேறியாக தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டிகளைப் பார்ப்பது, கணனியில் கேம்ஸ் விளையாடுவது என்றெல்லாம் பொழுதைப் போக்கி வரும் இளைஞர்களைப் பார்க்கிறோம்.

மனதில் எழும் தமோ குணத்தின் ஆதிக்கத்தினால் மனிதர்கள் சோம்பேறியாக மாறிவிடுவார்கள் என்று ஆயுர்வேதம் குறிப்பிடுகிறது. அதை அகற்ற, மூளைக்கு நிறைய வேலை கொடுக்க வேண்டும். மூளைக்கு எவ்வளவு வேலை கொடுத்தாலும் ஒன்றும் ஆகாது. எவ்வளவுக்கெவ்வளவு மூளைக்கு வேலை கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லதே தவிர கெடுதல் இல்லை. கத்தி தீட்டத் தீட்ட கூர்மையாகிறதே, அதைப் போலத்தான் புத்தியும். ஓயாமல் மூளைக்கு வேலை கொடுத்தால் மூளை குழம்பும் என்பது விஞ்ஞானரீதியாகச் சரியல்ல. மனக் கவலை மிகுந்தால்தான் மூளையைப் பாதிக்கும். கவலைதான் கூடாது.

சம்பந்தப்பட்டவர் எதில் ஆர்வம் காட்டுகிறார் என்பதை உற்று அறிந்து, அதில் அவருக்கு ஏற்படக்கூடிய நன்மை, தீமைகளைப் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துக் கூறக்கூடிய இனிய நண்பர்கள் அல்லது உறவினர்கள் மூலம் பேசச் செய்வது நல்லது. இவ்விஷயத்தில் தொடர்ந்து முயற்சி செய்தால் சோம்பேறித்தன நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படக்கூடும்.

இவ்வாறு சோம்பேறியாக இருப்பவர்களுக்கு உடல்ரீதியாக ஏதேனும் கோளாறுகள் உள்ளதா? என்பதையும் கண்டறிய வேண்டும். அதற்கு ஒரு மருத்துவரின் உதவி தேவைப்படலாம். வீட்டிலுள்ளவர்களிடம் தெரிவிக்காத பல விஷயங்களை, வெளி மனிதர்களிடம் கூறுவதைப் பலரும் விரும்பக் கூடும். அதற்கான தீர்வையும் அவர்கள் மூலமாகப் பெறுவதால், மனரீதியாக நல்ல முன்னேற்றத்தை அடையக் கூடும்.

ஆயுர்வேத சிகிச்சையில், அணு தைலம் எனும் மூலிகைத் தைலத்தை மூக்கினுள் விட்டு உறிஞ்சுவதும், ஏலாதி சூரணத்தை இஞ்சிச் சாறுடன் குழைத்துச் சூடாக்கி, நெற்றியில் பற்று இடுவதும் முதலில் செய்யப்பட வேண்டியவையாகும். இதன் மூலம் மூளையிலுள்ள எல்லையில்லா சக்தியை மறைக்கும் தமோ குணத்தின் சூழலை நீக்க முடியும். மூள்ளப் பகுதியைச் சுறுசுறுப்பாக்கி, வேலைக்குச் செல்ல வேண்டும், பிறரைப் போல உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல மன வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பிராம்ஹீ, வல்லாரை, திரிபலை, சித்திர மூலம், வசம்பு, சதகுப்பை, தண்ணீர்விட்டான் கிழங்கு, தந்தீமூலம், நாகபலா வேர், சிபதை வேர் போன்றவற்றை நெய்யாகவும், தூளாகவும், தைலமாகவும் தயாரித்து விற்பனை செய்யக்கூடிய மருந்துகளின் பிரயோகம் மிகவும் சிறந்த சிகிச்சைமுறையாகும்.

கல்யாணகம், மஹாகல்யாணகம், பஞ்சகவ்யம், மஹாபஞ்சகவ்யம், பிராம்ஹீ, சாரஸ்வதம் என்ற பெயரிலிலெல்லாம் விற்பனை செய்யப்பட்டு வரும் பல மூலிகை நெய் மருந்துகளில், அவருக்கு உகந்ததை குடிக்கச் செய்து, உடலுக்கும், மூளைக்கும் தேவையான நெய்ப்பை ஏற்படுத்தி வாந்தி, பேதி, வஸ்தி எனும் இனிமா சிகிச்சைமுறைகளைச் செய்து உடல் மற்றும் மனத்தின் அழுக்குகளைக் களைந்து, உடலையும் மனதையும் புத்துணர்ச்சியூட்டும் ஆயுர்வேத சிகிச்சைமுறைகளும் சிறந்ததே.

மனதைச் சார்ந்த உபாதைகளுக்கு "தலப்பொதிச்சல்" என்ற ஒரு சிகிச்சையை கேரளாவில் சிறப்பாகச் செய்கின்றனர். மனதின் மிகவும் உயர்ந்த ஸத்வகுண வளர்ச்சிக்காக, மூலிகைகளை அரைத்துத் தலைப்பகுதியில் பற்றுப் போட்டு, அமரச் செய்யும் இந்த வகைச் சிசிச்சையும் எதிர்பார்க்கக் கூடிய நல்ல பலனைத் தருவதாகக் கூறப்படுகிறது.

### கில்லாடி கிராம்பு

- தசைப்பிடிப்பை போக்க கிராம்பு எண்ணெயை பாதிக்கப்பட்ட இடத்தில் தடவலாம்.
- கிராம்பை வறுத்து தூளாக்கி ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரில் கலந்து வாய் கொப்பளித்தால் பல் வலி, ஈறு வலி பறந்தோடிவிடும்.
- கிராம்பில் சிறிதளவு உப்பு சேர்த்து தண்ணீர்விட்டு அரைத்து நெற்றியில் இருபக்கமும் பற்றுப் போட தலைவலி தலை காட்டாது.
- தொண்டை எரிச்சல் இருந்தால் இரண்டு மூன்று கிராம்பை வாயில் இட்டு நன்றாக மென்று சாறை விழுங்கினால் எரிச்சல் மெல்ல குறையும்.
- நெஞ்சுச் சளி உள்ளவர்கள் ஐந்தாறு கிராம்பை ஒரு டம்ளர் அளவு நீரில் கொதிக்க வைத்து தேன் கலந்து அடிக்கடி குடித்து வர, சளி குறையும்.
- சளி, இருமலால் தலை பாரமாக இருந்தால் மூன்று கிராம்பு, அரை தேக்கரண்டி சுக்கு இரண்டையும் தண்ணீர்விட்டு மையாக அரைத்து மூக்கிலும் நெற்றியிலும் பற்றுப் போடவும்.

# உபகண்டத்தின் தயவு இல்லாமல்

# இலங்கை தனித்து இயங்க முடியாது

## முன்னாள் இலங்கை வங்கி உழியர் செ.சிவபாலன்

(குருநகர்)

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை என்பது உலகளாவிய மட்டத்தில் தன்நலம் சார்ந்தாகவே இருந்து வந்துள்ளது. அதேவேளை உபகண்டத்தின் தயவு இல்லாமல் இலங்கை தனித்தியங்க முடியாத நிலைமையும் அமைந்துள்ளது என முன்னாள் இலங்கை வங்கி ஊழியர் செ.சிவபாலன் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் திங்கள் மாலை 4.30 மணிக்கு யாழ். முதலாம் குறுக்கு வீதி டி.சி.எம்.மீட்டல் கல்வி நிலையத்தில் நடந்தேறிய இலங்கை, இந்திய சமகால உறவுகளும், போக்குகளும் என்னும் கலந்துரையாடலில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில் செ. சிவபாலன் கூறியதாவது, “1940 களில் இயங்கிய ஒரு அமைப்பு இலங்கையை இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளும் கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்துவந்ததும் நினைவு கொள்ளத்தக்கது. இதற்கான காரண காரியங்களில் தொப்புள்கொடி உறவாக இலங்கை வாழ்மக்கள் இந்தியாவில் இருந்து வந்தோறிய குடிகள் என்கின்ற அடிப்படையும் சுட்டிக் காட்டத்தக்கது. இந்திய விஸ்தரிப்பை ஜே.வி.பி. இலங்கையை அது விழுங்கிவிடும் என்னும் அச்சப்பாட்டுடனே பார்க்கிறது.

இலங்கையை இந்தியா விழுங்குகிறதோ இல்லையோ எவ்வித அரசியற் தீர்வினையும் இலங்கை இந்தியாவை விட்டு விட்டுச் செய்துவிட முடியாத அடிப்படையும் காணப்படுகிறது. முன்னைய காலங்களை விட இந்தியப்பிரசன்னம் இப்போ அதிகரித்து வருவதும், இலங்கையுடன் சீனா வைத்துள்ள ராஜதந்திரத் தொடர்புகளை இந்தியா சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும் விசேடமான சங்கதிகள் இவ்விதம் அவர் தெரிவித்தார். (68)

# புதியநிர்வாகத் தெரிவு


(யாழ்.நிருபர்)

காரைநகர் மணற்காடு அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் புனரமைப்பு திருப்பணி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கபடவுள்ளன. திருப்பணி வேலைகளை நிறைவேற்று முகமாக ஆலய பெறுநர் வே.நடராசா தலைமையில் புதிய திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

உபதலைவர் தி.மகேஸ்வரன், செயலாளர் க.பாலச்சந்திரன், உப செயலாளர் க.பாலசிங்கம், பொருளாளர் பொ.பரந்தாமன், உப பொருளாளர் க.புவனேந்திரன் உட்பட 13பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்களாக ஆலய பிரதம சிவாசாரியார் நா.ஞான சம்பந்தக் குருக்கள், திருமதி ப.பரமேஸ்வரி அம்மையார் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (10)

# பரமர் சங்கமம்



‘எப்பொருள் யார் யார் வாய்க்கேள்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னதாக திருவள்ளுவர் அருளிய வாக்கு.

இதனை ‘குலக்குறி’ இலக்கியம் வாசிப்பின் மோட்சம்; எனச் சுட்டும் தம்பி ந.மயூரரூபன் இவற்றை எல்லாம் தூக்கி வீசி விட்டு எல்லாத்துக்கும் பழைய கண்ணாடியைப் போட்டுப் பார்க்காமல் புதிய கணனி. மன்னஞ்சல்களில் நாட்டம் கொள்ளச் சொல்கிறார்.

பரமர் சங்மத்தில் அவரது கருத்தியலை சுட்டி எழுதியதற்கு ‘இந்தப் பதிவு தொடர்பாக எவரும் பெரிதாக அக்கறை கொள்வதில்லை என்றாலும் விடையங்களைப் பகிர்வது அவசியமாகப்பட்டது’ என்று வழிக்கு வந்தது நல்லதொரு சகுணமாகவே கருதலாம்.

வாதப் பிரதி வாதம் ஆரோக்கியமாக அமைய வேண்டும். பரமர் சங்கமமும் இலக்கிய சர்ச்சைக் களமாக அமைவது ஆரோக்கியமான விடையமே எதை எதையோ எல்லாம் விரிவாக பார்க்கும் அவரது நோக்கில் புதியதுதான் பழசு, பழையது தான் புதிசு எனப்படாமல் போவதே விவாதத்திற்கு உரியதாகிறது.

‘அறிஞனின் வாய் அவனது இதயத்தில் இருக்கிறது. முட்டாளின் இதயம் அனவது வாயில் இருக்கிறது’ என்பதற்கேற்ப ஒருவரே அறிஞனாகவும், முட்டாளாகவும், அதற்கும் அப்பால் மிருகமாகவும், விசரனாகவும் கூட ஆகிவிடுவதைக் காண்கிறோம்.

கார்ல்ஸ் மாக்ஸ் எண்ணம் போன்று ஆயிரம் மலர்கள் மலரட்டும் அதில் நவ சிந்தனையை வரவேற்போம். அதை விடுத்து புரியாமை என்பது பொதுப் பிரச்சினை இல்லை தனிப்பிரச்சினை; என்றால் ‘தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்’ எண்டதும் பாரதியின் மடைத்தனமல்லவா?

சொல்லும் விடயத்தை வாசகன் புரிந்து கொள்ளும் விதமாக அந்தப் பந்தி வார்த்தைகளில் அச்சொட்டாக விளவேண்டும். எதையோ நினைத்து எதையோ சொன்னால் அந்தப் பொருள் இன்னொருவரிடம் சரியாகக் கடத்திவிடாது.

தம்பி மயூரரூபன் கூறுவது ஒரே தடத்தில் அல்லது வாய்ப்பாடு போன்று இலக்கியங்கள் படைக்கப்படக் கூடாதென்பதுதான். அதை அவர் சொன்ன வார்த்தைகள் திரிபு படுத்திவிட்டது.

விடையம் எழுத்துப் பிரதியில் தெளிவாக்கக் கூடாது, ஆயினும் இருக்க வேண்டுமென்பது சரியாக இல்லை. சில விமர்சகர்கள் குறிப்பிடுவது போன்று ஒவ்வொரு தடவையும் வாசிப்புக்கு உள்ளாக்கப்படுகையில் புதிய விடையங்களைத் தெரிவிக்க வேண்டும், படைப்பு எனக்கொள்ளலாம்.

அனைத்துப் படைப்புக்களும் வாசிப்புக்கு உள்ளாக்கும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு செய்திகளை வழங்குவதும் உண்டு.

உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தை செய்திப் பத்தரிகைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாகப்பரப்பி விடுவதுபோல்.

கருப்பொருளைப் படிமமாக அல்லது குறியீடாகச் சொல்வதென்பது வேறு வாசகப்பிரதி முற்று முழுதாக விடயத்தைச் சொல்லி விடக்கூடதென்பது வேறு.

திரும்ப எழுதிய கட்டுரையிலும் குலக்குறி விலக்கு என் இரண்டு வாசகங்களைப் போட்டு அதற்கு விளக்கங்களையும் எழுதி இருப்பதைப் பார்த்தால் அவலை நினைத்து உரலை இடித்த மதிரித்தான் இருக்கு இல்லையே பின்னை...

# கலந்துரையாடல்

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான ஆலய அறங்காவலர் சபையின் கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு திருவிழா உபயகாரர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (175)

# பாலம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கொடிகாமம் பிரதான வீதியில் உள்ள முள்ளி பாலங்களில் ஒரு பால வேலைகள் நிறைவடைந்துள்ளது.

முள்ளியில் உள்ள இரண்டு பாலங்களும் ஒரே தடவையில் வேலைகள் நடைபெற்று வரும் நிலையில் தற்போது ஒரு பால வேலைகள் நிறைவடைந்து மற்றைய பால வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

முன்னர் இப்பாலங்கள் சேதமடைந்திருந்த நிலையில் போக்குவரத்துக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெற்றுவந்தாகவும் பாலங்கள் புனரமைக்கப்பட்டுவதால் சிரமமின்றி இதனூடாக போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (150)

# ‘காந்தீயம்’ வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ வெளியீடான ‘காந்தீயம்’ சஞ்சிகையின் ஏப்ரல் - மே இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழின் பிரதியொன்றை இலவசமாகப் பெற விரும்பும் அன்பர்கள் ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட, சுய முகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர் ‘காந்தீயம்’, காந்திநிலையம் 8 ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடிமென ‘காந்தீயம்’ இதழாசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

காந்தி நிலையத்தின் ஸ்தாபகர் சி.க.வேலாயுதபிள்ளை அவர்களின் சிறப்பிதழாக இம்முறை காந்தீயம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முரசின் இன்றைய பலன்

**(17.04.2013 - புதன்கிழமை)**

விஜய வருஷம் சித்திரை மாதம் 04 ஆம் திகதி.
நட்சத்திரம் திருவாதிரை முற்பகல் 11.02 வரை. திதி ஸப்தமி.
பின்னிரவு 02.56 வரை. இராகுகாலம் 12.04 - 01.34 வரை.
சுபநேரம் 04.34 - 06.04 வரை. சித்தம்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

**மேடம்**
சுறுசுறுப்பு, சமயோசிதமாக செயற்படுவீர்கள். தாமதமான பணி நிறைவேறும். தொழில், அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பணவரவு திருப்திகரமாகும். வெகு நாள்த் தேடிய பொருள் கைவந்து சேரும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்பாடு.

**ரிஷபம்**
எது செய்தாலும், விமர்சையாகச் செய்வீர்கள். உங்கள் திறமை பாராட்டுப் பெறும். தொழில், போட்டி குறையும். உபரி வருமானம் கிடைக்கும். இல்லறத்துணை விரும்பியது செய்து மகிழ்வீர்கள். வீடு, வாகன மாற்றத்திற்குப் பலன்.

**மிதுனம்**
தர்மசங்கடமான சூழ்நிலையை சந்திப்பீர்கள். பொறுமை நிலைமையை சீராக்கும். தொழிலில், அதிக நேரம் பணிபுரிவதால் பிற்பகல் அசதி இருக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம். புத்திரரின் நற்செயல், விரக்தியான மனதிற்கு ஆறுதல் தரும்.

**கடகம்**
உங்களிடம் சிலர் பொறாமை கொண்டு பேசுவர். விலகுவது நல்லது. தொழிலில் உருவாகிற இடையூறு சரி செய்வீர்கள். புதிய புதிய செலவுகள் வரும். கடன் பெறுவீர்கள். சிகிச்சை பெற நேரும். குடும்பத்திற்குள் ஒற்றுமை மிகவும் தேவை.

**சிம்மம்**
தியாக மனதுடன் நடப்பீர்கள். புதியவர்களுக்கும் உதவுவீர்கள். தொழில், வளர்ச்சி அதிகரிக்கும். தாராள பணவரவு. வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். உறவுகள் உங்களைப் புரிந்துகொள்வர். குடும்பத்தினர் பாசம் வெளிப்படும்.

**கன்னி**
எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தரக்கூடாது. செயல்களில் தற்காப்பு பின்பற்ற வேண்டும். தொழில், சிறு குறுக்கீடு வந்து விலகும். சீரான பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்கு உணவில் கவனம். பிள்ளைகளால் மனதிற்கு இதம்.

**துலாம்**
சிலர் உங்களை ஏளனமாகப் பேசுவர். புறக்கணித்து விட்டு, சொந்தப்பணியில் ஆர்வம் கொள்வீர்கள். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். சேமிப்பு செலவுக்கு பயன்படும். பிரயாணம் செய்ய நேரிடும். ஒவ்வாத உணவுகள் விலக்கவும்.

**விருச்சிகம்**
சுற்றுப்புற சூழல் தொந்தரவு இருக்கும். செய்யும் வேலையில் நன்மை பெற, தகுந்த திட்டமிடுதல் அவசியம். தொழில், அளவான மூலதனம் போதும். பணவரவு திருப்தி. பொது சேவையில் ஈடுபடுவீர்கள். மதிப்பு மரியாதை கிடைக்கும்.

**தனுசு**
மனதில் நல்ல சிந்தனைகள். செயலில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வளர தேவையான உதவி கிடைக்கும். சராசரி பணவரவு. கடன் திரும்பும். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு வெகுமதி. குடும்பத்தினருடன் மகிழ்ச்சியான ஓய்வு.

**மகரம்**
மனதில் உற்சாகமுடன் செயற்படுவீர்கள். புது முயற்சிகளுக்கு அனுகூலத்தீர்வு கிடைக்கும். தொழில், வளர்ச்சிப் பணி நிறைவேறும். ஆதாய பணவரவு. எதிர்காலத்திற்குத் தேவையான திட்டமிடல். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்**
குடும்ப நலனுக்கு உதவும், கருணை மனம் கொண்டவரைச் சந்திப்பீர்கள். எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும். தொழில், புதிய வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவு. பெண்கள், ஆடை ஆபரணம் வாங்க யோகம். தாயின் வழியில் உதவி வரும்.

**மீனம்**
குடும்ப விஷயங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். புதிதாக ஏதேனும் தொடங்குவதைத் தள்ளிப்போடுங்கள். தொழிலில் சிறு குளறுபடி வந்து விலகும். தக்க சமயத்தில் உறவினரின் உதவி உங்களைக் காக்கும். சுபகாரியச் செலவு வரும்.

பின்வருவனவற்றை தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| (1) 11 | 1) (dh)தொலஹ |
| (2) 12 | 2) (dh)தஹ(த்)துன |
| (3) 13 | 3) பஹலொவ |
| (4) 14 | 4) எ(க்)கொலஹ |
| (5) 15 | 5) தாஹ(த்)தர |

பின்வரும் உரையாடலை தமிழில் எழுதுங்கள்.

(1)



ஓயாகே நம மொகக்(dh)த?

.............................................

What's your name?

(2)

மகே நம அனுலா.

.............................................

My name is Anula.



(3)



ரோஹல கொ(த்)தனத தியென்னே?

.............................................

Where is the hospital?

(4)

பாசல கிட்டுவ தியெனவா

.............................................

near the School



பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

(1) நிஸ்ஸப்தவ இன்ன. (Be quiete)-----------------------------

(2) ஒபகே செபசனீ(ப்)ப கொஹோமத? (How are you?)------------

(3) மம ஹொந்தின் இன்னவா (I'm fine.) ---------------------------




தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை -2013

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

1) Read and Match

| | |
|---|---|
| 1) Ball | (1)  |
| 2) Doctor | (2)  |
| 3) Cake | (3)  |
| 4) Hat | (4)  |
| 5) Monkey | (5)  |

2) **Read and write under the suitable heading**

| | | | |
|---|---|---|---|
| Lion | Eleven | Twenty | Orchid |
| seven | Six | Rabbit | C ow |
| Lotus | Rose | Robin | Rat |

| Flowers | Animals | Numbers |
|---|---|---|
| 1) ............................ | 1) ............................ | 1) ............................ |
| 2) ............................ | 2) ............................ | 2) ............................ |
| 3) ............................ | 3) ............................ | 3) ............................ |

### 3) Re- arrange the words

1) old / you / how / are ? ------------------------------------------------
2) mother name ? / your / what's ------------------------------------------------
3) have / I / kites / two ------------------------------------------------
4) I / teacher / am / a ------------------------------------------------
5) we / cricket / like / playing ------------------------------------------------

### 4) Read and draw

1) A green mango

2) Seven blue Orange

3) Ten red balls

4) Eleven yellow pencil

### 5) Fill in the blanks with the words given

1) A teacher works in a ...........................................
2) Farmers grow ...........................................
3) I have a ..... ...........................................
4) My sister ia a ...........................................
5) A policeman uses a ...........................................


School
Paddy
teddy bear
doctor
whistle


### 6) Reade and mark "T" for true and "F" for false.


1) A driver uses a chisel ( )
2) A nurse works in a hostel ( )
3) Mango is a fruit ( )
4) we can drink soup ( )
5) Elephants are birds ( )




### 7) Look and the correct words.

1)  1) apple 2) beetroot 3) pumpkin




2)  1) square 2) round 3) circle

3)  1) pen 2) pencil 3) pencel



4)  1) bok 2) book 3) boak

### 8) Read and colour

1) Colour the rabbit yellow
2) Colour the rat red
3) Colour the x-mas tree green
4) Colour the x-ray blue
5) Colour the kettle pink
6) Colour the queen black

(1) 
(2) 
(3) 
(4) 
(5) 
(6) 

### 9) Read and write

(1)  ---------
(2)  ---------
(3)  ---------
(4)  ---------
(5)  ---------
(6)  ---------

* Shorts
* Shirt
* Skirt
* Bread
* Rice and curry
* Toy cat

# மாநில அரசின் உரிமைகளைப் பாதிக்கும் நடவடிக்கையை முழுமூச்சுடன் எதிர்ப்போம்




மாநில அரசிடம் உள்ள, பொலிஸ் அதிகாரங்களை குறைக்கும் வகையிலான, மத்திய அரசின், எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்ள முடியாது. மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கும் எந்த நடவடிக்கையையும், முழு மூச்சுடன் எதிர்ப்போம் என, தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

“பொது ஒழுங்கு” குறித்த, மாநில முதல்வர்களின் மாநாடு, டில்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டில், முதல்வர் ஜெயலலிதாவின் சார்பில், அவரின் ஆங்கில உரையை, தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் முனுசாமி, அப்படியே வாசித்தார்.

உரையில், முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளதாவது, வீரப்ப மொய்லி குழு அளித்துள்ள பரிந்துரைகள் அனைத்துமே, காலாவதியானவை. தற்போதைய சூழலுக்கு, எந்த வகையிலும் ஒத்து வராதவை. சட்டம் - ஒழுங்கு என்பது, எப்போதுமே, மாநில அரசுகளின் கைகளில் தான் இருக்க வேண்டும். அந்த விவகாரங்களில், மத்திய அரசு, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, மூக்கை நுழைக்கும் செயல் ஏற்கத்தக்கது அல்ல் இதை வன்மையாக கண்டிக்கிறேன்.

மொய்லி குழுவின் பரிந்துரைகளை எல்லாம், யோசனைகளாகவே ஏற்க வேண்டும். இந்தப பரிந்துரைகளின் அடிப்படையில், மாநில அரசுகள், தங்களின் வசதிக்கேற்ப, புதிய சட்டங்களை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால், இந்தப் பரிந்துரைகளை, மாநில அரசுகள் மீது திணிக்கக் கூடாது. ஒரு மாநிலத்திற்குள், துணை இராணுவத்தை அனுப்ப வேண்டும் எனில், அந்த மாநில அரசிடம், மத்திய அரசு அனுமதி பெற வேண்டும் என்பது தற்போதுள்ள நடைமுறை. இதை மாற்றும் வகையில், மாநில அரசின் அனுமதி இல்லாமலேயே, இராணுவத்தை அனுப்ப, மத்திய அரசு ஆர்வம் காட்டுகிறது இதை கடுமையாக எதிர்க்கிறேன். மத்திய புலனாய்வு அமைப்பான, சி.பி.ஐ.யை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக, கூட்டாட்சி அமைப்புக்கு எதிராக, பரிந்துரை அளிக்கப்பட்டு உள்ளதையும் ஏற்க முடியாது. தற்போதுள்ள நடைமுறையே போதுமானது. மாநில அரசின் அனுமதியோடுதான், சி.பி.ஐ. எந்தவொரு வழக்கையும் கையில் எடுக்க வேண்டும் என்ற நிலை தொடர வேண்டும் என்றார்.




விழுப்புரம் மாவட்டம், சித்தால் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்யச் சென்ற தே.மு.தி.க. வினருக்கு ஒப்புகை சீட்டு வழங்காததால், எருமை மாட்டிடம் மனுகொடுப்பதைக் காணலாம்.

## 13 வயதுச் சிறுமி திருமணம் 45 வயதுப் பொலிஸ் அதிகாரி கைது



13 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்ய முயன்ற 45 வயதுப் பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். உத்தரப்பிரதேச மாநிலம் சந்தோலி மாவட்டத்தின் பாலூயா பகுதியில் 13 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்ய முயற்சி செய்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். உத்தாரிகான் கிராமத்தில் 13 வயதுச் சிறுமியை கோவிலில் வைத்து திருமணம் செய்து கொள்ள முயன்ற போது சத்தீஸ்கார் மாநிலம் ராய்பூர் டி.எஸ்.பி. பிரத்யுமன் குமார் யாதவ் (45வயது) என்ற பொலிஸ் அதிகாரியே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி திருமணம் செய்து கொள்வது குறித்து பொலிஸாசாருக்கு கிராம மக்கள் செய்தி தெரிவித்ததை அடுத்து, அவரைக் கைது செய்துள்ளனர். இது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.




## விபத்தில் உயிருக்குப் போராடியவருக்கு உதவி செய்யாததால் இருவர் பலி



விபத்தில் துடிதுடித்த குடும்பத்தினருக்கு எவரும் உதவ மறுத்ததால் சம்பவ இடத்திலேயே இருவர் பலியானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 2.8 கிலோமீற்றர் நீள குகைப்பாதை உள்ளது. இந்தப் பாதையில் 'நேற்றுமுன்தினம் சென்ற இருசக்கர வாகனம் மீது லொறி மோதியது. இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற பெண்ணும், அவரது மகளும் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டனர்.

இந்தப் பெண்ணின் கணவரும், மகனும் பலத்த காயம் அடைந்தனர். அப்போது அவர்களைக் கடந்து பல வாகனங்கள் சென்றன. மனைவி மற்றும் மகளின் உடல்கள் அருகே வலியால் துடித்துக்கொண்டிருந்த மகனை கையில் பிடித்தபடி, தனக்கு உதவி செய்யும்படி அந்த நபர் கத்தியும் எவரும் கண்டுகொள்ளவில்லை. இந்தக் காட்சிகள் அனைத்தும் கண்காணிப்பு கமராவில் பதிவாகின. இதையடுத்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் மீட்கப்பட்டனர்.

கண்கணிப்பு கமராவின் கட்டுப்பாட்டு அறையில் உள்ள ஊழியர்களும் ஒன்றரை மணி நேரம் தாமதமாகவே பொலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். உடனடியாக தகவல் தெரிவித்திருந்தால், அந்த நபரின் மனைவியை காப்பாற்றியிருக்க முடியும் என்று தேசிய மகளிர் ஆணைய தலைவர் மம்தா சர்மா குற்றம் சாட்டியுள்ளார்.

## தங்கம் விலை வீழ்ச்சி ஏழைப்பெண்கள் மகிழ்ச்சி



பல்வேறு நாடுகளில் இருப்பில் உள்ள தங்கம் வெளிச்சந்தைகளில் விற்கப்பட்டு வருகின்றன. தங்கத்தில் முதலீடு செய்யும் போக்கும் மாறியுள்ளது. இது போன்ற காரணங்களால் சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. இந்தியாவிலும் தங்கத்தின் விலை குறைந்து வருகிறது.

கடந்த 4 தினங்களில் மட்டும் ஆபரண தங்கத்தின் விலை பவுணுக்கு இந்திய ரூபாவில் ரூ.2, 632 குறைந்துள்ளது. தங்கத்தின் விலையில் தொடர்ந்து ஏற்பட்டுள்ள இந்தச் சரிவு நடுத்தர மற்றும் ஏழைப் பெண்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தங்கத்தின் விலையில் தொடர்ந்து வீழ்ச்சி காணப்படுவதால் தங்கத்தின் மீது முதலீடு செய்தவர்கள் அதனை விற்று வருகிறார்கள். இதனால் மேலும் விலை குறைய வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

## நிலக்கரி சுரங்க ஊழலில் சட்டத்தரணிகளை நியமிக்க முடிவு

(புதுடில்லி)

நிலக்கரி சுரங்க ஊழல் வழக்குத் தொடர்பாக, நீதிமன்றில் நடக்கவுள்ள விசாரணைக்கு, தனி சட்டத்தரணிகளை நியமிக்க, சி.பி.ஐ. முடிவு செய்துள்ளது.

நிலக்கரி சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ததில், ஊழல் நடந்ததாக, குற்றச்சாட்டு எழுந்ததை அடுத்து, இதுகுறித்து, சி.பி.ஐ. விசாரிக்கிறது. சி.பி.ஐ. விசாரணையில், மத்திய அரசு தலையிடுவதாகவும், இது தொடர்பாக, சி.பி.ஐ., இயக்குனர் மற்றும் அதிகாரிகளை, மத்திய சட்ட அமைச்சர், அஸ்வனி குமார், சந்தித்துப் பேசியதாகவும், எதிர்கட்சிகள் புகார் தெரிவித்தன.

இதையடுத்து, இது தொடர்பாக, நீதிமன்றில் நடக்கவுள்ள விசாரணையில், சி.பி.ஐ.க்கு உதவுவதற்காக, மத்திய அரசு சார்பில், சட்ட நிபுணர்கள் எவரையும் அனுப்புவது இல்லை என, முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனால், தனி சட்டத்தரணிகளை நியமிக்க, சி.பி.ஐ. முடிவு செய்து உள்ளது

## இந்திய – பாகிஸ்தான் எல்லையில் கமராவுடன் இறந்து கிடந்த பறவை

### இராணுவ அதிகாரிகள் விசாரணை



உடலில் கமரா மற்றும் எலெக்ட்ரோனிக் உபகரணங்கள பொருத்தப்பட்டிருந்த நிலையில் இந்திய எல்லைப் பகுதியில் பறவையொன்று இறந்து கிடந்தமை குறித்து இராணுவ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான பாலைவன எல்லைப் பகுதி ஜெய்பூர் அருகே உள்ள ஜெய்சால்மர் என்ற இடத்தில் வல்லூறு (கழுகைப் போன்ற பெரிய அளவிலான) பறவை ஒன்று இறந்து கிடந்தது.

அந்தப் பறவையின் உடலில் கமரா மற்றும் எலெக்ட்ரோனிக் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அத்துடன், இறந்து கிடந்த வல்லூறின் உடலில் பாகிஸ்தானில் உள்ள ஒரு விலாசமும், தொலைபேசி இலக்கமும் சிவப்பு மையில் குறிக்கப்பட்டுள்ளது. இந்திய பகுதிகளை உளவு பார்ப்பதற்காக இந்தப் பறவையை பாகிஸ்தான் அனுப்பி இருக்குமா? என்ற கோணத்தில் இராணுவ அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

கடந்த 2010ஆம் ஆண்டில் புறாவின் காலில் கமராவைப் பொருத்தி இந்தியாவிற்குள் அனுப்பி பாகிஸ்தான் உளவு சேகரித்தமை குறிப்பிடத்தக்கது. வேட்டைக்காரர்கள் யாரேனும் இந்தப் பறவையைப் பயன்படுத்தி இருப்பார்களா? என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படுகிறது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# எச்சரிக்கை விடுக்காமல் அதிரடியாகத் தாக்குவோம்

## – வடகொரியா தென்கொரியாவுக்கு மிரட்டல்



(பியாங்யாங்)

வட கொரியா என்ற தனி நாட்டை உருவாக்கிய கிம் இ சுங்-கின் பிறந்த நாள் நேற்று முன்தினம் அந்நாட்டின் தலைநகர் பியாங் யாங்-கில் விமர்சையாக கொண்டாடப்பட்டது.

அதே வேளையில், வட கொரியாவின் போர் மிரட்டலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக தென் கொரியா தலைநகர் சியோலில் நேற்று முன்தினம கண்டனப் பேரணி நடைபெற்றது.

இது, வட கொரியாவின் கோபத்தை மேலும் தூண்டியுள்ளது. வட கொரியா அரசின் சார்பில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த கோபத்தின் கனல் வெளிப்பட்டது.

தென் கொரியாவில் உள்ள பொம்மலாட்ட அதிகார வர்க்கத் தின் சார்பில் எங்களை எதிர்த்து நேற்று நடாத்தப்பட்ட பேரணி கண்டிக்கத்தக்கது. இந்த நேரத்தில் இருந்து, எவ்வித முன் எச்சரிக்கையும் விடுக்காமல், தென் கொரியா மீது எப்போது வேண்டுமானாலும் வட கொரியா அதிரடியாக தாக்குதல் நடத்தும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் கொரிய தீபகற்பத்தில் அமைதியை நிலைநாட்ட முயற்சித்து வரும் வேளையில் வட கொரியாவின் இந்த அறிவிப்பு போர் பதற்றத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

# கடும் பசி வந்தால்

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பார்கள். சிலருக்கு பசி எடுத்து விட்டால் மிகவும் துவண்டு போவார்கள். இதற்கு மாற்றுவழி ஒன்றை விஞ்ஞானிகள் ஆராய்ந்து யோசனை தெரிவித்துள்ளனர்.

பசி எடுத்தால் "ஸ்பிப்பிங்" கயிற்றை எடுத்து விளையாடுங்கள் அல்லது சைக்கிள் சவாரி செய்யுங்கள் என்றும், இதில் ஏதாவது ஒன்றை 25 நிமிடம் முதல் 30 நிமிடங்கள் செய்தால் பசி பறந்து போய் விடும் என்றும் தெரிவிக்கிறார்கள்.



சுமார் 15 ஆண்களை இதில் ஈடுபடுத்தி பயிற்சி கொடுத்ததில் இவர்களுக்கு பசி உணர்வு மிகக்குறைவாக இருப்பது தெரியவந்தது. அதுமட்டுமல்ல இது உடலுக்கும் நல்ல பயிற்சியாகும்.

# முஷாரப் கோரிக்கை நிராகரிப்பு

(இஸ்லாமாபாத்)

கராச்சித் தொகுதியில் தன்னுடைய வேட்புமனுவை ஏற்க வேண்டும் என்ற பாகிஸ்தான் மாஜி அதிபர் முஷாரப்பின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது.

பாகிஸ்தானில் வரும், மே 11 இல், நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இது வரை, 24 ஆயிரத்துக்கும் அதிகமான வர்கள், வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் அதிபர் முஷாரப், நான்கு தொகுதிகளில் போட்டியிடத் திட்டமிட்டார். ஆனால், சித் ரால் தொகுதியில் மட்டும், அவர் வேட்புமனு, ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கராச்சி உள்ளிட்ட, இரண்டு தொகுதிகளில் வேட்புமனு நிராகரிக்கப்பட்டு விட்டது. இஸ்லாமாபாத்தில், இன்னும் முடிவு தெரியவில்லை.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஸெரீப், லாஹூரில் போட்டியிடுகிறார். அவரது வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கராச்சி தொகுதியில், என் வேட்புமனுவை நிராகரிக்காமல், ஏற்க வேண்டும் என, தேர்தல் தீர்பாயத்திடம் முஷாரப் மனு செய்திருந்தார்.

இந்த மனுவை, இஸ்லாமாபாத், உயர்நீதிமன்ற நீதிபதி விசாரித்தார். அரசியலமைப்பை மீறி நடந்து கொண்டது, நீதிபதிகளை சிறையில் அடைத்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் முஷாரப் மீது உள்ளதால், அவரது வேட்புமனுவை ஏற்க முடியாது என, தேர்தல் தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.



பாகிஸ்தானில் விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தலைநகர் இஸ்லாமாபாத்தில் தனது கட்சித் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட முன்னாள் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஸ்ரப்.

# ஆட்சிக்கு எதிராகப் பேசிய தலைவருக்குத் தண்டனை

(குவைத்)

குவைத் நாட்டு முன்னாள் எம்.பி.யும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பவர் முசாலாம் அல்-பார்ராக்.

இவர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடந்த பொதுக் கூட்டத்தில் இளவரசர் சாபாஹ் அல்-அகமது ஆட்சிக்கு எதிராக பேசினார்.

ஆட்சியாளர்கள் சர்வாதிகாரப் போக்கைக் கைவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பான வழக்கில் முசாலாம் அல்-பார்ராக்கிற்கு 5 ஆண்டு சிறையில் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தகவலை அரசு சட்டத்தரணி நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இதனால் அங்கு பதற்றம் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

உலகச் செய்திகள்

# மரதன் ஓட்டப்போட்டியில் 3 முறை குண்டு வெடிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் மாசெஸ்டர் மாகாணத்தில் உள்ள பாஸ்டன் நகரில் நேற்று முன்தினம் சுமார் 27 ஆயிரம் பேர் பங்கேற்ற மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது.

போட்டியில் பங்கேற்றவர்கள் இறுதிக் கோட்டை நெருங்கிய வேளையில் பீரங்கி முழங்கியது போன்ற சப்தத்துடன் குண்டு வெடித்தது. தொடர்ந்து 1/2 மணி நேரத்திற்குள் அடுத்தடுத்து மேலும் 2 குண்டுகள் வெடித்தன.

இதனால், மரதனில் பங்கேற்றவர்கள் மூலைக்கு ஒருவராக சிதறி ஓடத் தொடங்கினார்கள். அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது. காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல அம்புலன்ஸ் வாகனங்கள் விரைந்து வந்தன.



சம்பவ் இடத்தை முற்றுகையிட்ட பொலிஸார், காயமடைந்தவர்களை அம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்தனர். குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களில் 2 பேர் பலியானதாவும் சுமார் 30 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பாஸ்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டுகளை ரிமோட் கண்ட்ரோல் மூலமாக இயக்கி வெடிக்கச் செய்திருக்கலாம் எனவும், இது தீவிரவாதிகளின் தாக்குதலாக இருக்கக் கூடும் என்றும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. நிலைமையை தீவிரமாக கண்காணித்து வரும் ஒபாமா, காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளை விரைந்து செய்யும்படி மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவ இடத்தில் வெடிக்காத 2 குண்டுகளை கைப்பற்றிய பொலிஸார் அவற்றை செயலிழக்கச் செய்தனர். இச்சம்பவத்தையடுத்து, நியூயோர்க் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

# பூகம்பம் ஏற்படுவதைக் கண்டறியும் எறும்புகள்

(நியூயார்க்)

பூகம்பம் ஏற்படப் போவதை, சிறிய உயிரினமான, எறும்புகள் ஒரு நாளுக்கு முன்பே அறிந்து கொள்வதாக, ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பூகம்பத்தை முன்கூட்டியே துல்லியமாக அறியக்கூடிய கருவி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஜெர்மனியில் உள்ள டிஸ்பர்க் பல்கலைக்கழக, உயிர் அறிவியற் துறை ஆய்வாளர், கேப்ரியல் பார்பெரிக் தன்னுடைய சக ஆய்வாளருடன் 3 ஆண்டுகள் சிவப்பு நிற சிற்றெறும்புகள் குறித்து ஆய்வு செய்தார்.

இதற்காக, பிரத்தியேக மென்பொருளில் உருவான, வீடியோ காமராவின் துணையுடன் இந்த ஆய்வை மேற்கொண்டார்.

அவர் தனது ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது,



சாதாரண நாட்களில், பகல் நேரம் முழுவதும் இரை சேகரிப்பதில் ஈடுபடும் எறும்புகள், இரவு நேரங்களில் தன்னுடைய இடமான புற்றில் ஓய்வெடுக்கும். ஆனால், பூகம்பம் வருவதற்கு ஒரு நாளுக்கு முன்பு, இரவு நேரத்தில், புற்றில் இருந்து வெளியேறிவிடுகின்றன.

பூகம்பம் ஏற்பட்ட பின்பு, சாதாரண நிலைக்கு திரும்பி விடுகின்றன. பூகம்ப நேரத்தில் பூமிக்கடியில் தோன்றும் வாயுக்கள் மற்றும் இயக்கங்கள் காரணமாக, எறும்புகள் வெளியேறுகின்றன. இவ்வாறு ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஊடகக்காரர் மீது தாக்குதல் அபாயம்

## கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

MTV/MBC ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலுக்கமைய கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் MTV/MBC ஊடக வலையமைப்பின் பிரதிநிதிகள் சிலர் முறைபாடு செய்துள்ளனர். ஊடகவியலாளர்கள் குறித்து சம்பந்தப்பட்ட குழுவினர் தகவல்களைத் திரட்டியுள்ளதாக MTV/MBC ஊடக நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரத்மலானை அல்லது கொழும்பிலுள்ள MTV/MBC நிறுவன ஊழியர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2009 ஆம் ஆண்டு தெபானமவில் அமைந்துள்ள MTV/MBC நிறுவன கலையகத்தொகுதி மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் விடுக்கப்பட்டிருந்த அச்சுறுத்தல் குறித்து இதே போன்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவ்வாறு அச்சுறுத்தல் விடுககப்பட்டு இரண்டு தினங்களின் பின்னர் MTV/MBC நிறுவனம் மீது பாரிய தாக்குதல் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி மாசிவன் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இரு ந்து நேற்று வயோதிபப் பெண் ஒருவரது சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி மேற்கு மாசிவன் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணராசா கனகம்மா (வயது-72) என்ற வயோதிபப் பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

மகளது வீட்டில் தனிமையில வசித்துவந்த குறித்த வயோதிபப் பெண் அருகில் உள்ள மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று வருவது வழமை எனவும் இதன் போது கோவிலிற்கும் வீட்டிற்கும் இடையே உள்ள கிணறு ஒன்றைப் பயன்படுத்துவது வழமை எனவும் சம்பவதினமும் குறித்த பெண்ணிற்கு தலைச சுற்றும் இருந்ததாகவும் தெரியவருகின்றது.

இந்த நிலையில் குறித்த பெண்ணை வீட்டில் காணாத அவரது மகள் அண்மையில் உள்ள குறித்த கிணற்றைச் சென்று பார்த்தபோது அவர் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

சடலத்தை கோப்பாய் பொலிஸார் மீட்டதுடன் திடீர்மரண விசாரணை அதிகாரி த.பிரேம்குமார் ஸ்தலத்தில் விசாரணைகளை மேறகொண்டதுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சடல பரிசோதனையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (02)

# ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு

கிராமங்களின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயறபடுவதனூடாக கிராமத்தின் உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் சிறார்களின் கல்வி என்பனவற்றை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

அண்மையில் மறவன்புலோ பாரதி சனசமூக நிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமங்களின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் எவரது செயற்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் எந்தக் காரணிகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார். யுத்தத்தின் பின்பு கட்டியெழுப்பப்பட்டு வரும் பிரதேசங்களில் ஒன்றாகக் காணப்படும் மறவன்புலோ கிராம மக்களுக்குரிய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அக்கிராமத்தின் தேவைகள் அனைத்தையும் நாம் நிறைவேற்றித்தருவோம் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள் பொதுஅமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஈரானில் மீண்டும் பூமியதிர்வு 40 பொதுமக்கள் மாண்டனர்

ஈரானின் தென்கிழக்கு பகுதியில் நேற்றையதினம் மீண்டும் இடம்பெற்ற சக்திவாய்ந்த பூமியதிர்ச்சி காரணமாக குறைந்தபட்சம் 40 பேர் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுவதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் பூமியதிர்ச்சி ரிச்டர் அளவுகோலில் 7.8 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் எல்லையில் உள்ள காஷ் நகரிலிருந்து 86 கிலோமீற்றர் தொலைவில் இந்த பாரிய பூமியதிர்ச்சியின் தோற்றமையம் காணப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மத்திய கிழக்கிலும் வளைகுடாவிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. தென்மேற்கு ஈரானில் இந்த மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற 6.3 ரிச்டர் அளவிலான பூமியதிர்ச்சி காரணமாகக் குறைந்தபட்சம் 37 பேர் உயிரிழந்துள்ளதுடன், 850 பேர் காயமடைந்தனர்.

# வடக்கில் சூரியன் உச்சம் உஷ்ணம் நீடிக்கும் சாத்தியம்

நாட்டில் பலபகுதிகளிலும் பரவலாக மழைபெய்து வருவதையடுத்து உஷ்ண காலநிலை படிப்படியாக குறைந்து வருவதாக காலநிலை அவதான நிலையம் கூறியது. ஏப்ரல் 5 முதல் நேற்று வரை சூரியன் இலங்கைக்கு நேரே உச்சம் கொடுத்ததினால் நாட்டில் உஷ்ண காலநிலை காணப்பட்டது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேசத்திற்கு நேரே சூரியன் உச்சம் கொடுத்தது. கடந்த இருவாரங்களுக்கு மேலாக நீடித்த உஷ்ண காலநிலை இம்மாத இறுதிவரை நீடிக்கும் என எதிர்பார்ப்பதாக காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. எனினும் சில பிரதேசங்களில் நேற்று முன்தினம் இடியுடன் கூடிய மழை பெய்ததாக அறிவிக்கப்படுகிறது.

மழையுடன் மின்னல் தாக்கும் அபாயம் உள்ளதோடு காற்றின் வேகமும் அதிகரிக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அநேக பிரதேசங்களில் மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என அறிவிக்கப்படுகிறது. நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்த கடந்த 72 மணி நேரத்தில் அநுராதபுரத்தில் 60.1 மி.மீ. உம் யாழ்ப்பாணத்தில் 39.3 மி.மீ. உம் நோர்டனில் 20.1 மி.மீ. உம் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. காலி, பேருவளை, கொழும்பு உட்பட பலபகுதிகளில் இடைக்கிடை இடியுடன் மழை பெய்துள்ளது. இதே வேளை, மாத்தறை மாவட்டத்தின் பல பகுதிகளில் பெய்து வருகின்ற கடும் மழையின் காரணமாக ஜின்கங்கை, நில்வளா கங்கை என்பவற்றின் நீர்மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது.

### கூட்டமைப்பில்...

விடயமும் அதிக நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், சிவாஜிலிங்கம், சுரேஷ்பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், விநோநோகராதலிங்கம் உட்பட அங்கத்துவக் கடசிகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில கலந்துகொண்டனர்.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள எவரும் பங்குபற்றவில்லை. ஆனந்தசங்கரி நாட்டில் இல்லாதபடியால் பங்கு பற்றவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

### காணாமல்போன...

வன்புணர்வு தொடர்பாகவும் அவர்களின் சிறுநீர் மற்றும் இரத்த மாதிரிகள், பெண்குறி சிதைவுகள் தொடர்பில் மருத்துவப் பரிசோதனை தகுந்த மருத்துவ நிபுணரினால் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். சாவகச்சேரி பொலிஸார் தெரிவிக்கையில், யாழ்.கைதடி சிறுவர் இல்லத்திலிருந்து காணாமல் போன சிறுமிகள் தொடர்பில் தேடுதல் நடாத்தப்பட்டதில் ஒரு சிறுமி கைது செய்யப்பட்டதை அடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது ஏனைய 7 சிறுமிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுவர் மற்றும் பெண்கள் பொலிஸ் பிரிவில் சிறுமிகள் தொடர்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த சிறுமிகள் தொடர்பில் யாழ்.சிறுவர் நீதிமன்றிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக யாழ்.சாவகச்சேரி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (02)

### சிறுபான்மையினர்...

செய்யவில்லை, தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களையும் விடுவிததுள்ளது. உலகம் முழுவதிலும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம், கைது செய்யப்பட்டவர்களை, இரகசிய தடுப்பு நிலையங்கள் உள்ளிட்ட சிறைகளில் வைத்துள்ள அமெரிக்கா, பொறுப்புக்கூறல் குறித்து எம்மிடம் எப்படிக் கேள்வி எழுப்பமுடியும்?

தீவிரவாதத்துக்கு எதிரான, அமெரிக்காவின் போரின்போது, ஆட்கடத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. அல்கெய்டா செயற்பாட்டாளர் ஒருவரை கைது செய்து அமெரிக்காவின் மத்திய புலனாய்வு முகவரகத்திடம் (RPIV) ஒப்படைத்ததாக அரசாங்கம் மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளது. செப்ரெம்பர் 11 தாக்குதலின் விளைவாக, அமெரிக்கா முஸ்லிம்களை மட்டும் இலக்கு வைக்கவில்லை. அந்தத் தாக்குதலின் பின்னர், அமெரிக்காவில் கல்வி கற்றுவந்த எனது மகன் கூட சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

### குடும்பஸ்தரை...

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்ல இருந்த இவரை யாரும் பணத்திற்காக கடத்தியிருக்கக் கூடும் என தாம் சந்தேகிப்பதாக காணாமல் போனவரின் மனைவி தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். இம் முறைப்பாட்டை அடுத்து இளவாலைப் பொலிஸார் காணாமல் பேனவரைத் தேடிவருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

### தீயில் கருகிய...

யாளரிடம் அறிவித்தமையினையடுத்து உரிமையாளரினால் உடனடியாக வர்த்தக நிலையம் திறக்கப்பட்ட போதும் தீ வர்த்தக நிலையத்தினை ஆக்கிரமித்தமையினால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு அறிவித்தமையினையடுத்து சம்பவ இடத்திற்கு கொக்காவிலிருந்து விரைந்து சென்ற இராணுவ தீ அணைப்பு படையினர் கடுமையாகப் போராடியும் தீயைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்தும் தீ அணைப்புப் பிரிவினரும் வருகை தந்து கடுமையாக முயற்சித்து தீயை கட்டுப்படுத்த முடியாத நிலையில் வர்த்தக நிலையம் எரிந்து முற்றாக அழிந்துள்ளது.

ஒரே கூரையின் கீழ் அனைத்து வகையான ஆடை,காலணிகள் அழகு பொருட்கள், இலத்திரனியல் பல சரக்குப் பொருட்கள் என அனைத்து வகையான பொருட்களும் உள்ளடங்கிய தனியார் வர்த்தக நிலையமே மேற்படி அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

அனர்த்திற்கான காரணம் இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. இருந்தபோதும் மின் ஒழுக்கு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் மின்சார சபை ஆறு மாதங்களாக குமரகுரு வர்த்தக நிலையத்திற்கான மின் இணைப்பினைத் துண்டித்துள்ளது என கிளிநொச்சி மின் அத்தியட்சகர் குகராஜ் தெரிவித்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் இந்த வர்த்தக நிலையம் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரியவருகின்றது. இதனால் வர்த்தக நிலையத்தில் இருந்த பொருட்கள் மற்றும் கட்டடங்கள் எல்லாம் சேர்த்து 10 கோடிக்கு மேல் சேதமாகியுள்ளதாக வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தை ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட வர்த்தகருக்கு ஆறுதலும் தெரிவித்தார். (02)

### அமெரிக்க...

செய்துள்ளது குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஜப்பான் போன்று இலங்கைக்கு கொடை வழங்கும் முக்கிய நாடாக அமெரிக்கா இல்லை.

அமெரிக்காவிடம் இருந்து எமக்கு குறிப்பிடத்தக்களவு நிதி உதவி கிடைப்பதில்லை. எனவே அதன் 20 சதவீத நிதி உதவிக் குறைப்பு இலங்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று நினைக்கிறேன். இந்த விவகாரம் குறித்து நாம் பேசவேண்டிய தேவை உள்ளது. எனினும், பல்வேறு நாடுகளுக்கான நிதி உதவிகளை அமெரிக்கா குறைப்பது இது தான்முதல் தடவையல்ல. இது போன்று முன்னரும் பலமுறை நடந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### போலி...

வந்து இவ்வாறு பணத்தை மாற்றிக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஹோட்டல்கள், ஜவுளிக் கடைகளில் இவ்வாறு குறித்த போலி நாணயத்தாள்கள் மாற்றப்படுகின்றன. குறித்த நாணயத்தாள்களை உன்னிப்பாக கவனித்து கொடுக்கல் வாங்கல் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் சிறுபோகச் செய்கை விவசாயிகள் பிரச்சினைக்குத் தீர்வு



(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தின் பரந்தன் பிரதான கால்வாய்ப் புனரமைப்புப்பணி காரணமாக இவ்வருட சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்வதில் கிளிநொச்சி மேற்குப்பகுதி விவசாயிகள் எதிர் கொண்டு வந்த பிரச்சினைக்கு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் நேற்றுத் தீர்வுகாணப்பட்டுள்ளது.

குறித்த விவசாயிகள் கிளிநொச்சி ஐந்தாம் வாய்க்கால் பகுதியிலும் மற்றும் கணேசபுரம் பகுதியிலும் இவ்வருடமும் விதைப்பினை மேற்கொள்ளவதற்கான ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டுள்ளார். குறித்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் உரையாற்றுகையில்,

இரணைமடுக் குளம் மற்றும் குளத்தின் கால்வாய்களின் புனரமைப்பு பணிகள் மாவட்டத்தின் ஒட்டுமொத்த விவசாயிகளின் நன்மையினைக் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. இச் செயற்பாட்டுக்கு இரணைமடுக் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் அனைத்து விவசாயிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகின்றது. இதனைக்கருத்தில் கொண்டே முதற்கட்டமாக குளத்தின் பரந்தன் பிரதான கால்வாயின் (மேற்குப்பகுதி) புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதேவேளை, அனைத்து விவசாயிகளும் பயிர்செய்கையில் ஈடுபடவேண்டுமென்ற நோக்கிற்கமைவாகவும் அனைத்து விவசாயிகளும் பயன் பெறக்கூடிய வகையிலும் மாற்று இடங்களில் பயிர் செய்கைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தற்போது வயற்காணிகளின் சில உரிமையாளர்கள் புனரமைப்பிற்குள்ளாகும் பகுதி விவசாயிகள் கிழக்குப் பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் குறித்த விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகும் அவல நிலை உருவாகியிருப்பது மிகுந்த வேதனைக்குரியது. எனவே புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வந்தபோதும் பெரும் சவால்களுக்கு மத்தியில் குறித்த விவசாயிகளுக்கு கிளிநொச்சி ஐந்தாம் வாய்க்காலின் ஒருபகுதியிலும் கணேசபுரம் பகுதியிலும் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம் என அவர் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் இரணை மடுக் குளத்தின்கீழ் நெற்செய்கையில் ஈடுவது தொடர்பான நீர்ப்பங்குக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட ஏக்கர்களுக்கு மேலதிகமாகவும் சில விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்செயற்பாடானது வறட்சி ஏற்படுகின்ற சந்தரப்பம் உருவாகுமிடத்து அனைத்து விவசாயிகளையும் பாதிப்புக்குள்ளாக்கும் என்ற வகையில் தீர்மானிக்கப்பட்ட ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் விதைப்புச் செய்யயப்பட்டுள்ள பயிர்களை அழிவுக்குட்படுத்துவதென்ற முடிவும் எட்டப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் சிறீவாசன், நீர்பாசணத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுதாகரன், கிளிநொச்சி நில அளவைத் திணைக்கள அத்தியட்சகர் சிவராஜா மற்றும் துரித மீட்சித்திட்டங்களின் பிரதிப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணன், கிளிநொச்சி மாவட்ட செயலக பிதித்திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி பரமோதயன், நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் விகிர்தன், கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன், கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன் மற்றும் கமநலசேவைத் திணைக்கள அதிகாரிகள், பெரும்போக உத்தியோகஸ்த்தர்கள், திட்டக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களும், பாதிக்கப்பட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

# பயனற்ற போராட்டம்; வர்ணிக்கிறது ஆஸி.

(அவுஸ்ரேலியா)

அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்றுமாறு வலியுறுத்தி புகலிடக் கோரிக்கையாளர்கள் மேற்கொள்கின்ற உண்ணாவிரதம் வெற்றி அளிக்காது என அவுஸ்ரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார். மெல்போன் தடுப்பு நிலையத்தில் உள்ள 27 புகலிடக் கோரிக்கையாளர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றதனைத் தொடர்ந்தே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவர்கள் ஏன் உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர் என்பதற்கு குடிவரவுத் திணைக்களம் கருத்து எதனையும் தெரிவிக்காது.

இதேவேளை, அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என நம்பப்படுகின்றது.

ஆனால் இவர்களை சமூகத்தினுள் விடுவதற்கு பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி மறுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அடிப்படையில் அகதிகள் மதிப்பிடப்படுவதன் முக்கியத்துவத்தை பிரதமர் ஜூலியா கில்லார்ட் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், உண்ணாவிரதம் மேற்கொள்கின்ற அகதிகள் மிகவும் பலவீனமாக உள்ளனர். ஆனால் தற்போது இவர்கள் திரவ ஆகாரங்களை உட்கொள்வதாகவும் அகதிகளுக்கான நடவடிக்கை கூட்டமைப்பின் பேச்சாளர் அயன் ரின்ரோல் தெரிவித்துள்ளார்.

# விபத்தில் சிறுமி பலி; வாகனச் சாரதி கைது

(கொழும்பு)

வலஸ்முள்ள, அத்கேந்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கரை வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். வீடொன்றிற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி பின்நோக்கி தள்ளப்பட்ட போது பின்புறம் இருந்த சிறுமி அதற்குள் நசுங்குண்டு படுகாயடைந்துள்ளார்.

அதன் பின்னர் வலஸ்முள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுமி பின்னர் உயிரிழந்துள்ளார். ஹக்மன, கரவல்பிட்ட வடக்கு பகுதியைச் சேர்ந்த சிறுமி பெற்றோருடன் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தவேளை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வலஸ் முள்ள பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.




# வெளிவந்தது 'கலிங்கம்'

'கலிங்கம்' பல்சுவை இருமாத இதழ் வெளிவந்துள்ளது. பெப்ரவரி - மார்ச் மாதங்களுக்கான இவ் இதழில், தாஜ்மஹால் பற்றிய தகவல்கள், கவிதைச்சரம், மறைக்கப்பட்ட போராளியின் வரலாறு, பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான ஆய்வு, சீற்றங்களுக்கு அடிபணியாத சீனப்பெருஞ்சுவர், பெண்களுக்கான அழகுக் குறிப்புக்கள், ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா பற்றிய தொகுப்புக்கள் உட்பட பொது அறிவுத் தகவல்கள், பல்சுவை விடயங்களை உள்ளடக்கியதாக இவ் இதழ் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் விசமிகள் புகுந்து தாக்குதல்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு சிறிநாராயண சனசமூக நிலைய ஆண்டு விழா நிகழ்வில் விசமிகள் புகுந்து மக்களைத் தாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 11.00 மணியளவில் இடம்பெற்றது. நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு விட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றதன் பின்பு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மீது விசமிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. கல், கொட்டன்கள், வாள் போன்றவற்றைப் பயன்படுத்தி பொதுமக்களைத் தாக்கியதுடன், சொத்துக்களையும் நாசம் செய்துள்ளனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து கோப்பாய் பொலிஸார் குறித்த இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

# சுப்பர் ஓவரில் டில்லியை வீழ்த்தியது பெங்களூர்

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 21ஆவது லீக் போட்டி நேற்று இரவு 8.00 மணிக்கு பெங்களூரில் தொடங்கியது. இதில் பெங்களூர், டில்லி அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணியின் கப்டன் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

அதன்படி டில்லி அணியின் வார்னர், சேவாக் களம் இறங்கினார்கள். வார்னர் 15 ஓட்டங்களிலும், சேவாக் 25 ஓட்டங்களிலும், ஆட்டம் இழந்தனர். அதன்பின் வந்த ஜுனேஜா 17, ஜெவர்த்தன 28 ஓட்டங்களிலும், வெளியேறினர். கடைசியில் வந்த பதான் 8 பந்தில் 19 ஓட்டங்களை விளாச, டில்லி அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூர் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர்கள் ராகுல் 12, கெய்ல் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த ஹேராலி, டி வில்லியர்ஸ் ஜோடி சிறப்பாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தது. இருவரும் அணியை வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நிலையில் டிவில்லியர்ஸ் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

அப்போது பெங்களூர் அணி 16 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்களை எடுத்திருந்தது. அப்போது பெங்களூர் அணி வெற்றி பெற 24 பந்தில் 24 ஓட்டம் தேவைப்பட்டது. 7 விக்கெட் கைவசம் இருந்தது. ஆனால் அதன்பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க 20 ஓவர் முடிவில் 152 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் ஆட்டம் இடையில் முடிந்தது. ஆகவே, வெற்றி தோல்வியை நிர்ணயிக்க சூப்பர் ஓவர் கடைப்பிடிக்கப்பட்டது.



பெங்களூர் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. கெய்ல், டி வில்லியர்ஸ் களம் இறங்கினார்கள். உமேஷ் யாதவ் பந்து வீசினார். முதல் பந்தில் கெய்ல் ஒரு ஓட்டம் எடுத்தார். இரண்டாவது பந்தில் டி வில்லியர்ஸ் ஒரு ஓட்டம் எடுத்தார். 3 ஆவது பந்தில் கெய்ல் ஒரு ஓட்டம் எடுத்தார். 4ஆவது பந்தை டி வில்லியர்ஸ் மிஸ் செய்தார். இதனால் 4 பந்தில் 3 ஓட்டம் மட்டுமே பெங்களூர் அணி எடுத்திருந்தது. 5 ஆவது பந்தில் டிவில்லியர்ஸ் டீப் மிட்விக்கெட் திசையில் அருமையாக சிக்ஸ் அடித்தார். 6 ஆவது பந்தையும் அதே போல் சிக்சர் அடித்தார். இதனால் பெங்களூர் அணி 15 ஓட்டம் எடுத்தது.

அடுத்து 16 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வார்னர், ரோரேர் களம் இறங்கினார்கள். ராம்பவுல் பந்து வீசினார். முதல் பந்திலேயே வார்னர் ஆட்டமிழந்தார். இரண்டாவது பந்தை சந்தித்த பதான் பவுண்டரி அடித்தார். 3ஆவது பந்தில் பதான் ஓட்டம் எடுக்கவில்லை. 4ஆவது பந்தில் பதான் அருமையான சிக்சர் ஒன்று அடித்தார். 5ஆவது பந்தில் ஒரு ஓட்டம் அடித்தார். 6 ஆவது பந்தை ரோரேர் சந்தித்தார். கடைசிப் பந்திற்கு 5 ஓட்டம் தேவைப்பட்டது. ராம்பவுலின் அருமையான பந்து வீச்சில் ரோரேட் கிளீன் போல்டானார். இதனால் பெங்களூர் அணி வெற்றியீட்டியது.


# உடனடி வேலைவாய்ப்பு

தினமுரசு காரியாலய இயந்திரப் பகுதியில் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

SORD, KORD அச்சு இயந்திரங்களை இயக்கக் கூடிய அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக விருப்பமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.